# வடக்கு, கிழக்கு பாடசாலைகளில் இவ்வருட இறுதிக்குள் சிங்கள ஆசிரியர் நியமனம்!

Registered as a News Paper in Ceylon    விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 206
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 20    றஜபு 3    சனிக்கிழமை    (5-9-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்; தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

கோட்டை, சனி

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சகல அரசாங்க பாடசாலைகளிலும் சிங்கள ஆசிரியர்கள் இவ்வருட இறுதிக்குள் நியமிக்கப்படவிருக்கிறார்கள். இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வி அமைச்சர் ஜனாப் பதியுதீன் மஹ்மூத் தமது இலாகா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிகிறது.

வடக்குகிழக்கு மாகாணங்களில் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி கோரி நூற்றுக்கணக்கான மகஜர்களும் தீர்மானங்களும் இப் பகுதியைச் சேர்ந்த பொதுஸ்தாபனங்களிடமிருந்து அரசாங்கத்துக்கும் கல்வி அமைச்சுக்கும் கிடைத்த வண்ணமிருப்பதால் இவ்வித முடிவுக்கு கல்வி அமைச்சர் வந்துள்ளதாகக்கூறப்படுகிறது.

வடக்குகிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சிறுபான்மைத்தமிழர்கள் கம்யூனிஸ்ட் வாலிப இயக்கங்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக் கிளைகளே முக்கியமாக சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி வற்புறுத்தி வருகின்றனவாம். இந்த இயக்கங்களைச் சேர்ந்தவர்கள் மாணவர்களின் வீடுகளுக்குச் சென்று பெற்றோரிடம் சிங்கள மொழியைக் கற்க அனுமதிக்கும்படியும் வற்புறுத்தி வருகின்றனராம்.

# ஆலயப் பிரவேசத்தை தடுத்தால் 6 மாத கடூழியம்; ரூ. 1000 அபராதம்

## அரிசி ஒரு கொத்து இலவசம் இரண்டாவது கொத்து 75 சதம்

கொழும்பு, வெள்ளி

இரண்டாவது கொத்து பங்கீட்டரிசியை 75 சதமாக கொடுப்பதென நேற்றுக் கூடிய மந்திரிசபை முடிவு செய்துள்ளது. வழக்கம்போல் முதலாவது கொத்து அரிசி இலவசமாக வழங்கப்படும்.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவின் ஞாபகார்த்த தினமான செப்டம்பர் 26ம் திகதியிலிருந்து இரண்டு கொத்து அரிசி வழங்கப்படும். ஒரு கொத்து இலவசமாகவும், மற்றக் கொத்து 75 சதமாகவும் வழங்கப்படும்.

உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யும் நெல்லின் தொகையை அதிகரிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது. காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ இதற்கான புதிய திட்டத்தை அமைச்சரவையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பித்தார். புதிய திட்டத்தின்படி புசல் ஒன்றின் உத்தரவாத விலையான 14 ரூபா உற்பத்தியாளருக்கே நேரில் கிடைக்கும். இடையிலுள்ளோர் பயனடைய முடியாது.

ஆலையில் குற்றப்பட்ட அரிசியின் தரத்தை உயர்த்தி, இந்த அரிசியை கூப்பனுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

## கைதடியில் பஸ் விபத்து:
## 70 பிரயாணிகளும் உயிர்தப்பினர்

யாழ்ப்பாணம், சனி

இரட்டைத் தட்டு பஸ் ஒன்று வீதியைவிட்டு விலகி பக்கத்திலிருந்த தென்னந் தோப்புக்குள் பாய்ந்தது. கைதடி வயோதிபர் மடத்துக்குமுன் இச் சம்பவம் நேற்று நிகழ்ந்தது.

சுமார் 70 பிரயாணிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்ஸின் சில்லு திடீரென வெடித்தது. இதைத்தொடர்ந்து பஸ் தோட்டத்தினுள் பாய்ந்தது. சாரதியின் சாமர்த்தியத்தினால் 70 பிரயாணி[...]

[...]தட்டு பஸ் ஒன்றும், கார் ஒன்றும் மோதியதில் இருவர் பலியானதும், ஒருவர் அபாயகரமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருப்பதும் தெரிந்ததே.

(கு.வி.ம)

......

## ஆர். ஜீக்கு கடும் சுகவீனம்

கோட்டை, வெள்ளி

சிங்கள மஹாஜன கட்சியின் தலைவர் திரு ஆர்[...]

## செல்வச் சந்நிதி உற்சவம்

நெல்லியடி, வெள்ளி

தொண்டமனாறு வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, சகல இடங்களுக்கும் விஷேச பஸ் சேவை நடாத்த பருத்தித்துறை இ.போ.ச. டிப்போ முடிவு செய்துள்ளது.

ஆலயத்திற்கு வரும் பக்தர்களின் பாதுகாப்பை முன்னிட்டு தற்காலிக பொலிஸ் நிலையம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு செனிவரத்ன ஆகியோர் வாகனப்போக்குவரத்து ஒழுங்குகளை செய்து[...]

## தீண்டாமை ஒழிப்புக்கு புதியசட்டம் வருகிறது
### தேநீர்க்கடை லைசன்ஸ்களும் ரத்தாகும்

கோட்டை, வெள்ளி

இப்போதுள்ள சமூக குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத்தைத் திருத்துவதற்கான மசோதா விரைவில் தயாரிக்கப்பட்டு முடிந்துவிடுமென்றும் இன்னும் சில வாரங்களில் இது அமைச்சரவையின் பரிசீலனைக்குச் சமர்ப்பிக்கப்படுமென்றும் அறியப்படுகிறது. எப்படியும் சமூகக் குறைபாடுகள் ஒழிப்புச் சட்டத் திருத்த மசோதா இன்னும் இரண்டு மாதங்களில் ஆட்சிமன்ற[illegible]ல் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஹரிஜனர்களின் ஆலயப் [illegible]ப்படுகிறது.

பிரவேசத்துக்கு இடையூறு ... ஆலயப்பிரவேசத்துக்கு செய்பவர்கள் மீது வழக்குத் இடையூறு செய்தார் என்று தொ[...]ப்பட்டு அவர்கள் ஒருவர் மீது குற்றம் [...]

மசோதா அமையுமென்றும் சொல்லப்படுகிறது.

தேநீர்க்கடைகள், சிகையலங்கார நிலையங்களில்[...]

## தந்திமணி ஓடர் கிடைக்க 10 நாட்கள்?

யாழ்ப்பாணம், சனி

கொழும்பு புறக்கோட்டை தபால்கந்தோரிலிருந்து கே. பத்மநாதன் என்பவரால் பூநகரி தம்பிராயை சேர்ந்த என். நாகராஜனுக்கு அனுப்பிவைக்கப்பட்ட 50 ரூபா தந்திமணிஓடர், 10 நாட்களாக விநியோகிக்கப்படாமல் தாமதிக்கப்பட்டதாம்.

இம்மாத நடுப்பகுதியில்[...]

[...]கந்தோரில் எழுதப்பட்டதே இதற்குக்காரணமென கூறப்படுகிறது.

சுகயீனத்தை வைக்காக கொழும்பிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட இப்பணம் சம்பந்தமாக காசுபெறவேண்டியவர் பணம் அனுப்பியவருடன் தொடர்புகொண்டபின்னரே. இந்தப்பிழையை கண்டுபிடிக்கக்கூடியதாகவிருந்ததாம். தந்தியில் அவ[...]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றுகொண்டிருந்த பஸ்ஸின் சில்லு திடீரென வெடித்தது. இதைத்தொடர்ந்து பஸ் தோட்டத்தினுள் பாய்ந்தது. சாரதியின் சாமர்த்தியத்தினல் 70 பிரயாணிகளும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

இதே வீதியில் சில தினங்களுக்கு முன்னர் இரட்டைத்

## ஆர். ஜி.க்கு கடும் சுகவீனம்

கோட்டை, வெள்ளி

சிங்கள மஹா ஜன கட்சியின் தலைவர் திரு ஆர் ஜி. சேனநாயக்கா கடும் சுகவீனம் காரணமாக கொழும்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் பொறுப்பதிகாரி, உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு செனிவரத்ன ஆகியோர் வாகனப்போக்குவரத்து ஒழுங்குகளை செய்துள்ளனர் தேர் தீர்த்தோற்சவம் இம்மாதம் 14ம், 15ம் திகதிகளில் நடைபெறும்.

இரண்டு மாதங்களில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஹரிஜனர்களின் ஆலயப் பிரவேசத்துக்கு இடையூறு செய்பவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டு அவர்கள் மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு ஆறு மாதக் கடுழியச் சிறைத் தண்டனை அல்லது ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது சிறையும் அபராதமும் விதிக்கக் கூடிய முறையில் திருத்த மசோதா அமையுமென்று கூறப்படுகிறது.

ஆலயப்பிரவேசத்துக்கு இடையூறு செய்தார் என்று ஒருவர் மீது குற்றம் அ... தப்பட்டால் அக் குற்றச் சாட்டிலிருந்து தம்மை நீக்கிக்கொள்வதற்கான சாட்சியங்களை ஏற்பாடுசெய்து தம்மை விடுவித்துக்கொள்ள வேண்டிய முழுப் பொறுப்பும் அவரையே சாரக்கூடிய முறையிலேயே திருத்த மசோதா அமையுமென்றும் சொல்லப்படுகிறது.

தேநீர்க்கடைகள், சிகையலங்கார நிலையங்களில் சாதிப்பாகுபாடு காட்டப்படுவதை ஒழிக்குமுகமாக இத்தகைய போக்கை அனுஷ்டிப்பதாகக் கருதப்படும் கடைச் சொந்தக்காரர்களுக்கு அவர்களுடைய லைசென்ஸ் ரத்

(4-ம் பக்கம் பார்க்க)

பூநகரி தம்பிராயை சேர்ந்த என். நாகராஜனுக்கு அனுப்பி வைக்கப்பட்ட 50 ரூபா தந்தி மணிஓடர், 10 நாட்களாக விநியோகிக்கப்படாமல் தாமதிக்கப்பட்டதாம்.

இம்மாத நடுப்பகுதியில் அனுப்பிவைக்கப்பட்ட இந்த மணிஓடர் பெறவேண்டியவரின் பெயர் நாகராசன் என்றிருக்கவேண்டியது நாகலிங்கம் என்று பூநகரி தபாற் ... வைக்கப்பட்ட இப்பணம் சம்பந்தமாக காசு பெறவேண்டியவர் பணம் அனுப்பியவருடன் தொடர்புகொண்ட பின்னரே. இந்தப்பிழையை கண்டுபிடிக்கக்கூடியதாக விருந்ததாம். தந்தியில் அவசரதேவைக்காக அனுப்பி வைக்கப்பட்ட 50 ரூபா பணம் பட்டபாடு பற்றி அனுப்பியவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளார்.

4 ஆசிரியர்களையும் நியமிக்ககோரி

# கரவெட்டி பாடசாலை முன் தமிழ் பௌத்த மாணவர் மறியல்

உடுப்பிட்டி, வெள்ளி

கரவெட்டி ஸ்ரீ நாரத தமிழ் சிங்கள பௌத்த பாடசாலையைச் சேர்ந்த சுமார் 300 மாணவர்களும், பெற்ருேர்களும் நேற்றுப் பாடசாலையை பகிஷ்கரித்து வாசலில் சத்தியாக்கிரகம் செய்தனர்.

கடந்த 5 வருட காலமாக சம்பளமின்றி இப்பாடசாலையில் கடமையாற்றிய 15 ஆசிரியர்களில் 11 பேர்களுக்கு மட்டுமே நியமனம் வழங்கப்பட்டது. மற்றும் 4 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்படாததை ஆட்சேபித்தே சத்தியாக்கிரகம் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

4 ஆசிரியர்களும் உடுப்பிட்டித் தொகுதியைச் சேர்ந்தவர்களென்றும் நியமனத்தில் பாகுபாடு காட்டப்பட்டுள்ளதாகவும் பெற்ருேர் தெரிவித்தனர்.

பாடசாலை தலைமை ஆசிரியர் வடபகுதி கல்வி வித்தியாதிபதிக்கு இது பற்றி தெரிவித்ததைத் தொடர்ந்து நெல்லியடி பொலிசார் பாடசாலைக்கு வந்து நியமனம் பெற்ற ஆசிரியர்கள் உள்ளே செல்ல ஒழுங்கு செய்தனர்.

4 ஆசிரியர்களுக்கும் நியமனம் வழங்கும்படி கல்வி மந்திரிக்கும், நியமன எம் பி. திரு. எம். சி. சுப்பிரமணியத்திற்கும் பெற்ருேர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ். சட்ட நூலகம்

## டெலிபோன் துண்டிப்பு: மர்மம் என்ன?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சட்ட நூலகத்தின் தொலைபேசித் தொடர்பு துண்டிக்கப்பட்டுள்ளது தொலை பேசிக் கட்டணம், மற்றும் சம்பந்தப்பட்ட கட்டணங்கள் முழுவதும் பாக்கியின்றி செலுத்தப்பட்டும் எவ்வித முன்னறிவித்தலுமின்றி கொழும்பிலிருந்து வந்த அதிகாரி ஒருவர் இத் தொலைபேசியைத் துண்டித்து விட்டுச் சென்றுள்ளாராம்.

இது விஷயமாக சட்ட நூலகச் செயலாளர் வழக்கறிஞர் திரு. ரி. சோமசுந்தரம், யாழ்ப்பாணம் தபால் தந்தி தொடர்பு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கேட்ட பொழுது, இதுபற்றி தங்களுக்கு எதுவித தகவலும் தெரியாது என்றும், கொழும்பிலிருந்து வந்த அதிகாரி தொலைபேசித் தொடர்பை துண்டித்ததற்கான காரணம் எதுவும் கூறவில்லை என்றும் கூறினராம். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். சாராயத்தவறணை

# ரூபா 10,84,000 குத்தகை

## கடந்த வருடத்திலும் ரூபா 132,000 அதிகம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 5 சாராயத் தவறணைகள் நேற்று முன்தினம் 10,84,000 ரூபாவிற்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டன. யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் முன்னிலையில் 70-ம்-71-ம் ஆண்டுக்கு சாராயத் தவறணைகள் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது. யாழ்ப்பாண சரித்திரத்தில் சாராயத்தவறணைகள் கூடுதலான தொகைக்கு குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது இதுதான் முதல் தடவையாகும்.

யாழ்ப்பாணம் பெரிய கடையிலுள்ள சாராயத் தவறணை கடந்த வருடத்திலும் பார்க்க 132,000 ரூபா கூடுதலாகக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டது.

5 சாராயத்தவறணைகளும் கடந்த வருடம் குத்தகைக்கு கொடுக்கப்பட்ட தொகைக்கும் இவ்வருடம் குத்தகைக்குமுள்ள விபரம் வருமாறு:

யாழ் பெரிய கடை-487000 (கடந்த வருடம்), 1619,000 (இவ்வருடம்),

கரையூர்- 85,000 (கடந்த வருடம்) 130,000 (இத் வருடம், வல்வெட்டித்துறை-161,000 (கடந்த வருடம்) 175,000 (இவ்வருடம்) ஊர்காவற்றுறை-56 000 (கடந்த வருடம்) 93,000 (இவ்வருடம்) வண்ணுங்கேணி-66 000 (கடந்த வருடம்) 67,500 (இவ்வருடம்]

மீசாலையில் பயங்கர சம்பவம்

# திருட்டு சம்பவத்தையடுத்து நள்ளிரவில் மூதாட்டி படுகொலை

## சடலம் கிணற்றில் கண்டு பிடிப்பு

( நமது நிருபர் கு. வி. மகாலிங்கம் )

யாழ்ப்பாணம், சனி

மீசாலை வடக்கில் நேற்றிரவு 65 வயது மூதாட்டி படுகொலை செய்யப்பட்டார் இவரின் சடலம் வீட்டிலுள்ள கிணற்றில் காணப்பட்டது.

மீசாலை வடக்கு புத்தூர் சந்தி ஒழுங்கையில் உள்ள முத்தையா பெண் செல்லம்மாவின் மர்மமரணம் சம்பந்தமாக பொலிசார் தீவிரமாக விசாரணை செய்து வருகின்றனர்.

அவ்வீட்டில் கொலையுண்ட செல்லம்மாவும், அவரது கணவரும் மட்டுமே, வாழ்ந்து வந்தனர், வீட்டிலிருந்து சடலம் கிணற்றுள் இழுத்து வரப்பட்ட அடையாளமும் நிலத்தில் இரத்தக்கறையும் காணப்படுகிறது.

வீட்டில் பல பெறுமதியான சாமான்கள் திருடப்பட்டுள்ளதாகவும் கதவுகள் திறக்கப்பட்ட நிலையிலிருந்ததாகவும், அம்மிக்குளவி ஒன்று வழியில் காணப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

திருடர்களே இக்கொலையைச் செய்திருக்கலாமென பொலிஸார் கருதுகின்றனர் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

கடந்த சில மாதங்களில் பல திருட்டுகள் மீசாலைப் பகுதிகளில் நடைபெற்றுள்ளன.

# வட்டுக்கோட்டை எம். பி. கூட்டும் தமிழர் சோஷலிஸ முன்னணி

யாழ்ப்பாணம், சனி

**அரசாங்க எம். பி.க்கள், முற்போக்குவாதிகள், தொழிற்சங்கங்கள், தமிழ்க்காங்கிரஸ் ஆதரவாளர்களைக் கொண்ட தமிழர் சோஷலிச முன்னணி ஒன்றை உருவாக்கி அதன்மூலம் தற்போது நாட்டில் நிலவி வரும் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்கான நடவடிக்கைகளில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா ஈடுபட்டுள்ளார்**

இம்மாதம் 28ம், 29-ந் திகதிகளில் மகாநாடொன்றைக் கூட்டி தமிழர் சோஷலிச முன்னணியை அமைக்க விருப்பதாக திரு. தியாகராசா கூறினர். இம்மகாநாட்டுக்கு தமிழரசுக்கட்சியைச் சேர்ந்த ஆட்சிமன்ற உறுப்பினர்களுக்கோ அல்லது ஆதரவாளர்களுக்கோ அழைப்புக்கள் அனுப்பப்படமாட்டாது என்றும் அவர் சொன்ஞர்.

ஐக்கியமுன்னணி எம். பிக்கள், தமிழ்க் காங்கிரஸ் ஆதரவாளர்கள், முற்போக்குவாதிகள், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு அழைப்புகள் விடுக்கவிருப்பதாகவும், அதில் பெரும்பாலானேர் பங்கு பற்றுவார்கள் என்றும் திரு. தியாகராசா கூறினர்.

தற்போது நாட்டில் நிலவி வரும் பாஷைப் பிரச்னை, பொருளாதாரப் பிரச்னை, சட்ட நிர்ணயசபை முதலியன பற்றி மகாநாட்டில் ஆராயப்படும் என்றும், யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் மகாநாடு கூட்டப்படும் என்றும் அவர் தெரிவித்தார், அன்றைய தினம் தமிழர் சோஷலிச முன்னணி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் என்றும் அவர் சொன்ஞர்.

ஓய்வு பெற்ற பல்கலைக்கழக பேராசிரியர் திரு. நேசையாவினல் இம்மாதம் 14-ந் திகதி கூட்டப்படவிருக்கும் மகாநாட்டில் தமக்கு நம்பிக்கை இல்லை என்றும் இதை வன்மையாகக் கண்டிப்பதாகவும் திரு. தியாகராசா கூறினர், தமிழரசுக் கட்சியின் போர்வையில் இம் மகாநாடு நடத்தப்படுவதாகவும் அதைப் பகிஷ்கரிக்கும்படி தமிழ்த் தலைவர்களைத் தாம் கோருவதாகவும் அவர் தெரிவித்தார்.

# "அத்தாட்சிப் பத்திரங்கள் கொடுத்தும் கூப்பன் இல்லை?"

யாழ்ப்பாணம், சனி

"புதிய கூப்பன்கள் பெறுவதற்காக ஊர்காவற்றுறை காரியாதிகாரி கந்தோரில் அத்தாட்சிப் பத்திரங்களை நேரடியாக கொடுத்தேன். ஆனல் இதுவரை எனக்கு கூப்பன்கள், கிடைக்கவில்லை. இதனல் கூடிய விலை கொடுத்து அரிசி வாங்க வேண்டிய நிலையிலிருக்கின்றேன். இதையிட்டு விசாரணை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்''

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தையல் தொழிலாளராக பணிபுரியும் ரி. விக்டர்செல்வம் பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

எனது கூப்பனையும் என் மனைவியின் கூப்பனையும் இரு பிள்ளைகளின் பிறப்புச் சாட்சிப் பத்திரங்களையும் மற்றும் அத்தாட்சிப் பத்திரங்களையும் காரியாதிகாரி கந்தோரில் நேரில் சமர்ப்பித்தேன்.

இதுபற்றி காரியாதிகாரியிடம் விசாரித்தபோது 68-ம் ஆண்டு டிசம்பர் 6-ம் திகதி யாழ்ப்பாணம் கச்சேரிக்கு யாவற்றையும் அனுப்பியிருப்பதாக தெரிவித்தார். பல கஷ்டங்களின் மத்தியில் அப் பத்திரங்கள் மீண்டும் 70-ம் ஆண்டு ஜூன் 29-ம் திகதி கிடைத்தன. இதுவரை எனக்கு புதிய கூப்பன்கள் கிடைக்கவில்லை.

இம் மகஜரின் பிரதிகள் நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா, உள்நாட்டு உள்ளூராட்சி, பொதுநிர்வாக அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா, மந்திரி திரு. ரி. பி. இலங்கரத்தின ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

# பிரதமர் சிறிமா லுசாக்கா பயணம்

## ஆடம்பர வைபவம் இல்லை ஆனல்; ஆயிரக்கணக்கான மக்கள் வந்தனர்

கோட்டை, வெள்ளி

கோலாகலமான வழியனுப்புவைபவம் எதுவுமின்றி பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா இன்று நண்பகல் கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்திலிருந்து லுசாக்காவுக்குப் பயணமாஞர்.

செப்டம்பர் 8-ம் திகதி சாம்பியாவின் தலைநகரான லுசாக்காவில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டில் கலந்து கொள்ள இலங்கையில் இருந்து பிரதமர் சிறிமா தலைமையில் பயணமான தூதுகோஷ்டிக்கு விமான நிலையத்தில் உத்தியோகபூர்வமான வழியனுப்புவைபவங்கள் ஒன்றும் நடைபெறவில்லை. ஆயினும் மகா தேசாதிபதி அமைச்சர்கள் அதிகாரிகள் பலர் வழியனுப்புவதற்கு வந்திருந்தனர்,

பிரதமர் குறைந்தகட்டண வகுப்பிலேயே பிரயாணஞ் செய்தார். பொது நிர்வாகம் உள்ளூராட்சி உள்நாட்டு அமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா நிரந்தரக் காரியதரிசி திரு ரத்தினவேல் டாக்டர் மக்கிரவத்தை பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் அடங்கிய கோஷ்டியினரும் பிரதமருடன் செல்கின்றனர்.

வழியனுப்பு வைபவங்கள் நிகழாதிருந்த போதும் ஆயிரக்கணக்கான மக்கள் விமானநிலை

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### வகுப்புக்கள்

வகுப்புகள்:

க. பொ. த. (உயர்தர/சாதாரண) வகுப்புக்களுக்கு, தூயகணிதம், பிரயோக கணிதம், உயர்கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங்கள் பல்கலைக்கழக போதனாசிரியர்களால் நடத்தப்படுகின்றன. விபரங்களுக்கு 269, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2917

### விற்பனைக்கு

காணி:

பரந்தனில் பாசன வசதியுடைய விளைச்சலுள்ள 16 ஏக்கர் நெற்காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: தபால்பெட்டி எண் 88, கொழும்பு. 2192

காணி:

பெரியகுளம் - நெடுங்கேணியில் நீர்ப்பாசன வசதியுள்ள 9 ஏக்கர் நெற்காணி காலஞ்சென்ற ஜோசுவா, டட்லி அவர்களின் ஆதனம் விற்பனைக்குண்டு. விலை விபரங்கட்கு: அ. த. ஜெயசிங்கம், 5, முருகேசு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம். 2922

தெல்லிப்பளைச் சந்திக்கு அணித்தாய் காங்கேசன் துறைப் பிரதான வீதியில் 1 1/2 லாச்சம் நிலம் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: தாமோதர வில்லா, தெல்லிப்பளை. 2913

### சங்காபிஷேகம்

கைதடி, வெள்ளி

வடமராட்சி கிழக்குநாகர் கோவில் நாதத்தம்பிரான் ஆலயசகஸ்ர சங்காபிஷேகம் தண்டிகை உற்சவம் இம் மாதம் 7-ம் திகதி நடைபெறும்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### சனி 5—9—70

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 திரைகானம், 8-00 நிலையஒலிப்பதிவுள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள். 5-30 நாளையசந்ததி.

இரவு 6-10 வாத்தியஇசை, 6-30 விவசாயகேள்விபதில், 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 வயலின், 10-30 செய்தித்தொகுப்பு.

## முல்லைத்தீவில் குழந்தைகள் நோய்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதியில் நிலவும் கடும்வரட்சி காரணமாக அநேக குழந்தைகள் வாந்தி, வயிற்றோட்டம், காய்ச்சல் ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளனர். முல்லைதீவு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவோரில் நூற்றுக்கு எண்பது வீதம் இவர்களே.

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார்ஜானகி
நாகேஷ் — ஜெயந்தி
நடித்த

இரு கோடுகள்

ராஜா - யாழ்ப்பாணம்

(10-30, 2-30, 6-30, 9-45)

* துடிக்கும் இரத்தம் பேசட்டும்!
* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

### யாழ். நகரில் கரபந்தாட்டம்

# இன்று நடைபெறும் போட்டிகளில் 12 கோஷ்டிகள் மோதுகின்றன

யாழ்ப்பாணம், சனி

'ஈழநாடு' ஆதரவில் நடைபெறும் கரபந்தாட்ட 'நொக்கவுட்' போட்டி இன்று யாழ். மத்திய கல்லூரி கரபந்தாட்டத் திடலிலும், யாழ். பொலிஸ் சரபந்தாட்டத் திடலிலும் ஆரம்பமாகின்றது. போட்டிகள் மாலை 4-30-க்கு ஆரம்பமாகி, இரவு 8-30 வரை நடைபெறும்.

'ஈழநாடு' நடாத்தும் இப் போட்டி கரபந்தாட்ட ரசி

## 'ஈழநாடு' விளையாட்டு விழா

கர்களுக்கு பெரும் விருந்தாகவும், பொழுது போக்காவும் அமையும்.

### இன்றைய ஆட்டம்

யாழ் மத்திய கல்லூரியின் கரபந்தாட்டத் திடலில் நடைபெறும் போட்டிகளின் விபரம் வருமாறு:

4-30 க்கு: றெக்கிளமேஷன் சனசமூக நிலையம் — சென். ஜோசப் விளையாட்டுக் கழகம்.

5-30-க்கு: குருநகர் வி. க. — நீர்வேலி விநாயகர் வி. க.

6-30-க்கு: கே. கே. எஸ். டெவலப்மன்போட் 'பி' — இணுவில் நாவலர் வி. க

7-30-க்கு: சித்தங்கேணி நேருஜி வி. க. — நீர்வேலி யுனைட்டட் வி. க. 'பி'

யாழ். பொலிஸ் கரபந்தாட்டத் திடலில் இன்று நடைபெறும் போட்டிகளின் விபரம்:

4-30-க்கு: ஊர்காவற்றுறை காந்திஜி வி. க. 'பி' — கோப்பாய் வி. க.

5-30-க்கு: திருநெல்வேலி சிவன் வி. க. — மானிப்பாய் நாவலர் வி. க.

(தே. நி)

# கெடுதியான பத்திரிகைகளையே தடை செய்ய வேண்டும்

## அமைச்சருக்கு யாழ். இலக்கிய வட்டம் மகஜர்

தென்னிந்தியப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இறக்குமதித் தடை யோசனை பற்றி யாழ். இலக்கிய வட்டம் தபால், தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியருக்கு அனுப்பிவைத்துள்ள மகஜர் இது. இலக்கிய வட்டத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவரான 'யாழ்வாணன்' திரு. நா. சண்முகநாதன் இந்த மகஜரை அமைச்சருக்கு அனுப்பியிருக்கிறார். மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ள யோசனைகள் இங்கு தரப்பட்டுள்ளன.

யாழ். இலக்கியவட்டம், கடந்த பல்லாண்டுகளாக 'எங்கள்நாடு, எங்கள் எழுத்தாளர்கள், எங்கள் நூல்கள்' என்ற தேசிய மனப்பான்மையோடு, தரமுள்ள இலக்கியமே மக்களை வழிப்படுத்தும் எனவும், தரமற்ற இறக்குமதிப் பத்திரிகைகள் நம்நாட்டின் தேசிய மனப்பான்மைக்கும் வளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கும் எனவும் பொதுமக்கள் மத்தியில் பரவலாகப் பிரச்சாசம் செய்துவந்துள்ளது.

அவ்வழியில் நின்று, இன்று தென்னிந்தியாவிலிருந்து எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியனவற்றுள் தரமற்றவைகளைத் தடை செய்வதற்கு மக்கள் அரசாங்கம் எடுத்து

குக்கும், உளவளர்ச்சிக்கும் குந்தகம் விளைவிக்கும் பத்திரிகைகளையே தடைசெய்ய வேண்டுமென நாம் வற்புறுத்துகின்றோம்.

2. இலங்கையில் இறக்குமதியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றில் தரமானவை எவை, தரமற்றவை எவை, எவை தடை செய்யப்படவேண்டுமென்பதை, எமது நாட்டின் கலைகலாசார வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள எழுத்தாளர்களையும் நூலக சமாஜங்களையும் வாசகர் வட்டங்களையும் கலந்தாலோசித்த பின்னரே [illegible]மானிக்கவேண்டும்.

[illegible] நம்நாட்டின் பண்பாட்டிற்கு ஒவ்வாத எம்மொழிப் பத்திரிகை, சஞ்சிகையாலும், எந்த நாட்டிலிருந்து வந்தாலும் அவை தடை செய்யப்படவேண்டும்

முதலிடம் கொடுத்து அவற்றை வாங்கி ஊக்குவிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ள வேண்டும்.

தரமற்ற வெளிநாட்டுப் பத்திரிகைகள், எமது நாட்டின், பண்பாட்டிற்கு ஒவ்வாதன என்பதனைப் பொது மக்களுக்கு விளங்க வைக்கும் முகமாகவும், எமது நாட்டுச் சஞ்சிகைகளையும், எழுத்தாளர்களையும் மக்களுக்கு அறிமுகப்படுத்தும் வண்ணமும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் குறைந்தது வாரத்தில் ஒருமுறையாவது அரைமணி நேரம் கொண்ட நிகழ்ச்சியில், கல்விமான்கள், எழுத்தாளர் ஆகியோர் பங்கு பற்ற வசதியளிக்க வேண்டும்.

மேற்குறித்த விடயங்கள் பற்றி மேலும் விளக்கங்கள் தேவைப்படின், அவற்றைத் தருவதற்கு நாம் என்றும் தயாராகவுள்ளோம் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

## இன்றைய பலன்

(ஆவணி மாதம் 20-ம் திகதி) (5-9-70)

[illegible]ம்- சிறிய விடையத்திற்குக் கூட அதிகம் [illegible]

## நவீன முறையில் விவசாயம்

யாழ்ப்பாணம், சனி

இரணைமடு திட்டத்தின்கீழ் மேலும் 9000 ஏக்கா நிலத்தைவிவசாயத்திற்கு பயன்படுத்துவதுபற்றி கிளிநொச்சியில் நடந்த கூட்டத்தில் ஆலோசனை செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் திரு. ஜே. எம் சபாரத்தினம் இந்த விஸ்தரிப்பு திட்டத்தைப்பற்றி விளக்கிக் கூறினார். இத்திட்டத்தின்மூலம் விவசாயிகளுக்கு நவீனமுறை விவசாயம் பற்றியும், உரத்தைப்பயன்படுத்துவது பற்றியும், கிருமிநாசினி பயன்படுத்துவது பற்றியும் விளக்கிக் கூறப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி எம் பி திருவி ஆனந்தசங்கரி, நீர்ப்பாசன என்ஜினியர், உதவி அரசாங்க அதிபர், பாரியதிட்ட மனேஜர் ஆகியோடும் கலந்துகொண்டனர்.

(கு. வி. ம.)

## வட்டாரம் பிரிக்க ஏற்பாடு

அம்பன், வெள்ளி

முள்ளிப்பற்று கிராமசபை எல்லைக்குட்பட்ட முள்ளியான் வட்டாரத்தை இரு வட்டாரங்களாக பிரிப்பதற்கான ஆக்கவேலைகள் உள்ளூராட்சி உதவி ஆணையாளரினால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

## செம்மணியில் உப்புவிளைச்சல்

## 'நீங்காத நினைவு'க்கு தங்கப்பதக்கம் பரிசு

யாழ்ப்பாணம், சனி

வீமன்காமம் இளைஞர் சங்கத்தின் வெள்ளிவிழா அண்மையில் வெகுசிறப்பாக நடைபெற்றது.

நாடகப்போட்டியில்முதற் பரிசைப்பெற்ற கலைப்பெரு மன்றத்தினரின் 'நீங்காத நினைவு' என்னும் நாடகத்துக்கு இவ்விழாவின்போது தங்கப்பதக்கம் பரிசாகவழங்கப்பட்டது. இந்நாடகத்தில் இன்ஸ்பெக்டராக நடித்த திரு. கே. பத்மசேகரமும், வசந்தியாக நடித்த எட்வின் மூர்த்தியும் சிறந்த நடிகர்களுக்ான பரிசில்களைப்பெற்றனர். 'இரு ஜீவன்கள்' என்னும்நாடகத்தைத்தயாரித்த தெல்லியூர் நாடகமன்றம் இரண்டாவது பரிசைப்பெற்றது. திருமதி ஞா. சோமசுந்தரத்தால் இப்பரிசுகள் வழங்கப்பட்டன.

இறுதி நிகழ்ச்சியாக நாவலர் ஞாபகார்த்த நாடகப் போட்டியில் தங்கப்பதக்கம் பெற்ற அம்பனை கலைப்பெரு மன்றத்தின் 'நல்ல தீர்ப்பு' என்னும் நாடகமும் இடம் பெற்றது.

## "இசையின் காலப்பிரமாணத்தை விளக்குவது மிருதங்கம்"

தாவடி, வெள்ளி

'இசை, நாடகம், நடனம் முதலிய கலைத் தொண்டாற்றிய கலைஞர்கள் முன்னைய நாளிலே இழிவாகக் கருதப்பட்டார்கள். இதன் மூலம் தான் அக்கால மக்கள் கலை வளர்ச்சிக்குத் தடையாக இருந்தார்கள். ஆனால் இன்றைய மக்கள் நல்ல கலைஞர்களை நன்கு மதித்துப் போற்றி கலைவளர்ச்சிக்கு முன்னின்று பாடுபடுகிறார்கள். தாளவாத்தியங்களுள் தலைசிறந்ததான மிருதங்க வாத்தியத்துக்கெனத் தனி விழாவொன்றை எடுப்பது ஈழத்தின் கலையுலகில் புதுமையானதாகும். நந்தியம் பெருமானுடையநாமத்தைச் சூட்டி, மிருதங்க இசை மன்றத்தை நடாத்திவரும் மிருதங்க வித்வான் எம். என். செல்லத்துரையை ரசிகப்பெருமக்கள்பாராட்ட வேண்டும்'.

இவ்வாறு, நந்தி இசை மன்ற இரண்டாவது ஆண்டு மிருதங்க இசைவிழாவின் 2ம் நாள் நிகழ்ச்சிகளில கலந்து சிறப்புச் சொற்பொழிவாற்றிய திரு. சு. செல்வநாயகம் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது: 'மிருதங்க வாத்தியம் சிறந்ததொரு தெய்வீகக்கலை. நடராஜப் பெருமானின் கையிலே இருக்கின்ற உடுக்கையின் நாதத்தைக் கேட்ட தேவர்கள் பயமுற்றபோது, எம்பெருமான் அதை மிருதங்க உருவாக்கி நாதத்தை யெழுப்பினார். பின்னர், நந்தி தேவர் வாசிக்க இறைவன் நடனமாடினார் என்கிறது புராணம். இசைக்குக் காலப் பிரமாணத்தை அளிக்கும்

திருமதி சரஸ்வதி பாக்கியராசாவின் இசைக்கச்சேரி இடம் பெற்றது.

## ஓய்வுபெற்ற உப அதிபர்

தாவடி, வியா.

கொக்குவில் இந்துக் கல்லூரி உப அதிபர் திரு. ஏ. ஆர். இராசநாயகம் இம் மாதத்திலிருந்து ஆசிரியச் சேவையினின்றும் இளைப்பாறியுள்ளார்.

இவர் சண்டிலிப்பாய் ஆங்கிலப் பாடசாலை, வியாங்கொடை சென். மேரிஸ் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராயிருந்து பின்பு கொக்குவில் இந்துக் கல்லூரியில் சேர்ந்து இருபதாண்டுகள்வரை ஆசிரியப் பணி புரிந்தவர்.

ஆசிரியர் தொழிற்சங்கங்களில் முக்கிய பங்கு கொண்டு உழைத்த இவர் வடமாகாண ஆசிரியர் சங்கம், தேசீய ஆசிரியர் சங்கம் என்பவற்றிலும் அவற்றின் உப குழுக்களிலும் உயர்ந்த பதவிகள் வகித்திருக்கிறார். பிரச்சனைகள் தோன்றும் போது ஆசிரியர் சங்கக் கூட்டங்களில் இவரின் சமூகம் பெரிதும் வேண்டப்பட்டு வந்தது. மாணவனாயிருந்த காலத்தில் ஓர் விளையாட்டு வீரராகத் திகழ்ந்து இவர் பிற்காலத்தில் விளையாட்டுக்களின் நடுவராகப் பணிபுரிந்து பலரின் பாராட்டுகளையும் மதிப்பையும் பெற்றார்.

## கண்டிக்கு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

* துணிந்த நெஞ்சம் நிமிரட்டும்!!!
* உழைக்கும் வர்க்கம் சேரட்டும்!!!
* உரிமை உடமை காணட்டும்!!!

சோகத்தாய் சாரதாவின் உணர்ச்சி நடிப்பைக் காண வாரீர்.

செம்மீன் ஷீலா, சாரதா, மது. பிரேம்நசீர், திக்குரிச்சி மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் ஊர்வசி பரிசுபெற்ற

# துலாபாரம்

(மலையாளம்)

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)



இன்று மட்டும் இங்ஸ்லி (கொழும்பு)

வெலிங்டன் யாழ்ப்பாணம் திரைகளில்

(போயா, பிரிப்போயா காலை 10-30)



★ ஏ.வி.எம்.ராஜன்
★ சௌகார் ஜானகி
★ நாகேஷ் ★ குமாரிசச்சு
சாண்டோ எம். எம். ஏ. சின்னப்பதேவர்
★ கே. பி. சுந்தராம்பாள்
★ திருமுருக கிருபானந்தவாரியார்
மற்றும் பலர் நடித்த

'தெளிவில்லா இதயங்களைத் தெளியவைக்கும் தெய்வத் தமிழ்க் காவியம்'

# துணைவன்

கதை வசனம்: பாலமுருகன் — சங்கீதம்: K.V. மகாதேவன்

தயாரிப்பு: சாண்டோ M. M. A. சின்னப்பதேவர்


...எமது நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியனவற்றுள் தரமற்றவைகளைத் தடை செய்வதற்கு மக்கள் அரசாங்கம் எடுத்து வரும் முயற்சிகளை நாம் வரவேற்கும் அதே வேளையில் பின்வரும் கருத்துக்களையும் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவரவிழைகின்றோம்

1. எமது நாட்டின் கலை, கலாச்சாரம் என்பவற்றிற்கும், மக்களின் ஒழுக்க நெறிக்கும், எதிர்காலச் சந்ததியினரின் இலக்கிய நோக்...


**வெஸ்லி சினிமா**
மானிப்பாய்
தினசரி: 6-30, 9-30
போயா, பிரிப்போயா 2-30
எம். ஜி. ஆர்—பத்மினி நடித்த
**ராணி சம்யுக்தா**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்-கே. ஆர். விஜயா நடித்த
**விவசாயி**

**MANOHARA**
Jaffna
Daily 4-45, 7 & 9-45P.M.
Richard Benjamin
in
GOOD BYE COLUMBUS
[Color]

**REGAL** JAFFNA
Daily 4-45, 7 & 9-45 p m.
Poya, Pre-poya 4 Shows
Genevieve Waite
in
JOANNA
(Adults only)


...வேண்டும்.

... நம்நாட்டின் பண்பாட்டிற்கு ஒவ்வாத எம்மொழிப் பத்திரிகை, சஞ்சிகையானாலும், எந்த நாட்டிலிருந்து வந்தாலும் அவை தடை செய்யப்படவேண்டும்

...அன்னியச் செலாவணியில் நடைபெறும் மோசடியையும், குறிப்பிட்ட விலைக்கு மேலாக விலையைக் கூட்டி விற்று வாசகர்களைச் சுரண்டும் தனிப்பட்டோரின் ஏகபோக உரிமைகளை முறியடிக்கவும், பத்திரிகைகளை எதிர்காலத்தில் இறக்குமதி செய்யும் உரிமை, கூட்டுறவு நிறுவனங்களுக்கு அளிக்கப்படவேண்டும். இது சாத்தியமாகாதவிடத்து விலைக்கட்டுப்பாட்டுடன் கூடிய 'கோட்டா' முறையில் தனிப்பட்டவர்களுக்கு வழங்கப்படலாம். அவர்கள் இறக்குமதிக்குரிய பணத்தை இலங்கை வங்கி மூலம் மாத்திரம் தான் செலுத்தவேண்டும் எனப் பணிக்கப்படவேண்டும்

5. இறக்குமதியாகும் தரமற்ற பத்திரிகைகளைத் தடை செய்யும் அதேவேளையில் உள்ளூரிலும் ஒழுக்கம், பண்பாடு, என்பவற்றை ஊறுபடுத்தக் கூடியனவும், குற்றச் செயல்களைத் தூண்டிவிடக்கூடியனவுமாகிய செய்திகள் கட்டுரைகள் போன்றவற்றைத் தாங்கிவராதவாறு, எம்நாட்டுப் பத்திரிகைகளுக்கும் கண்காணிப்பு விதிக்கப்படவேண்டும்.

6. நம் நாட்டில் வெளிவரும் தரமான சஞ்சிகைகளை ஊக்குவிக்கு முகமாக, அரசாங்க திணைக்களங்கள், கூட்டுறவு நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள் என்பன அவற்றிற்கு விளம்பரங்கள் கொடுத்துதவவேண்டும்.

பாடசாலை நூல்நிலையங்கள் சனசமூக நிலையங்கள், பொதுசன நூலகங்கள் ஆகியனவற்றை, எமது நாட்டுச் சஞ்சிகைகளுக்கு...

## பலன்

(ஆவணி மாதம் 20-ம் திகதி)
(5-9-70)

மேஷம்- சிறிய விடையத்திற்குக் கூட அதிகம் ஆத்திரப்படுவீர்கள். மன அடக்கம் வேண்டும்.

ரிஷபம்- இலட்சியப் பாதையில் புதிய முன்னேற்றம் காணப்படும் தெய்வத்தின் அருளும் உண்டு

மிதுனம்- எதிர்பார்த்ததைவிட அதிகம் கிடைக்கலாம் பொன்னான தினம்.

கடகம்- கடமையில் புதிய ஆர்வம் பிறக்கும். நீண்டநாள் பிணக்கு இன்று நிவர்த்தியாகும்

சிம்மம்- எதிர்பாராத செலவினங்களினால் பாதிக்கப்படுவீர்கள். தொழிலிலும் தொல்லைகள் உண்டு.

கன்னி- இடர்கள் பல தாக்கும் இதயத்தில் எரிமலை குமுறும், இளமை நினைவுகள் நிழலாட்டம் போடும்.

துலாம்- வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைதென்படும். பெண்கள் மிகவும் அவதானமாக இருக்கவும்,

விருட்சிகம்- அவசர கோலம் தலைகாட்டும் அதன் வழித் துன்பங்கள் தொடரும் அடக்கமே நன்று.

தனுசு- வேண்டியவர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும். குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு.

மகரம்- வசதிகள் பெருகும் வாழ்க்கையும் வளமாகும். இன்று சுபநாள்

கும்பம்- திகைக்க வைக்கும் சம்பவம் இன்று நடைபெறலாம் பொறுமை நன்று

மீனம்- பிரிந்தவர்கள் வாழ்க்கையில்மீண்டும் இணைவர். இன்று பொன்னான நாள்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

...னால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

......

## செம்மணியில் உப்புவிளைச்சல் இல்லை

கொழும்புத்துறை, வெள்ளி

செம்மணி உப்பளத்தில் இவ்வருடம் இடைக்காலங்களில் பெய்த மழையினால் உப்புச்செய்கை பாதித்துள்ளது. நீரைப் பாய்ச்சி அளவாக விட்டுக்கட்ட போதிய வசதியில்லாததினால் குறைந்த அளவுகூட உப்பு விளைவிக்கமுடியாது போய்விட்டதாம்.

......

## தங்கப் பதக்கம் பெற்றார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கம் நடத்திய 10-வது ஆண்டு விழாவின் போது நடைபெற்ற பண்ணிசைப் போட்டியில் அளவெட்டி இசைக்கலைமன்ற மாணவன் செல்வன் சி. சிவானந்தராசா மேற்பிரிவில் முதலாவது இடத்தைப்பெற்று தங்கப் பதக்கமும் புத்தகங்களும் பரிசாகப் பெற்றார்.

இவர் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி 11-ம் வகுப்பு மாணவனாவார்.

......

## முல்லைத்தீவில் பஸ் சேவை

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவுப் பகுதி பஸ் சேவை ஸ்தம்பித்துள்ளது முல்லைத்தீவு இ. போ. ச. டிப்போவுக்குச் சொந்தமான 14 பஸ்களில் தற்போது மூன்று பஸ்களே சேவையில் ஈடுபட்டுள்ளன. இதனால் அரசாங்க உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள் பெரிதும் அவதிப்படுகின்றனர். அதிகாலையிலிருந்து பஸ்ஸுக்காக காத்து நின்றுவிட்டு மாணவர்களும் ஆசிரியர்களும் அரசாங்க ஊழியர்களும் வீடு திரும்புகின்றனர்.

......

## நுகே கொடையில் சதுர்த்தி விழா

கோட்டை, வெள்ளி

நுகேகொடை சிவபுரி சித்திவிநாயகர் ஆலயத்தில் இன்றுவிநாயகசதுர்த்திவிழா கொண்டாடப்பட்டது. ஆலய முகாமையாளர் திரு. வே. பாலபாஸ்கரன் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 'ஈழவேந்தன்' சிறப்புச் சொற்பொழிவாற்றினார்.

...பெருமான் அதை மிருதங்க உருவாக்கி நாதத்தை யெழுப்பினார். பின்னர், நந்திதேவர் வாசிக்க இறைவன் நடனமாடினார் என்கிறது புராணம். இசைக்குக் காலப் பிரமாணத்தை அளிக்கும் பெருமையுடையது மிருதங்கம்'.

திருநெல்வேலி கலாமன்ற மண்டபத்தில் நடந்த இவ் விழாவினை, கலையரசு திரு. க. சொர்ணலிங்கம் குத்து விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். திரு எஸ். ஆர். கனகநாயகம் தலைமைவகித்தார்.

மன்ற மாணவர்களின் மிருதங்க இசைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன. இவ்விழாவிலே, ஈழத்தில் இதுவரையில் நடைபெற்றிராத வகையில், 'மிருதங்க தரங்கம்' என்ற நிகழ்ச்சி இடம் பெற்றது. இந் நிகழ்ச்சியில், மன்ற ஆசிரியருடன் 4 மாணவர்கள் மிருதங்கம் வாசித்தனர் பின்பு, தேவார ஆசிரியர் திரு எஸ். இராசையாவின் திருப்புகழ் பாடலுக்கு தனியாவர்த்தனம் வாசிக்கப்பட்டது. இறுதி நிகழ்ச்சியாக...

...யாட்டுக்களின் நடுவராகப் பணிபுரிந்து பலரின் பாராட்டுகளையும் மதிப்பையும் பெற்றார்.

......

## கண்டிக்கு திரும்பினர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்ய ரோட்டரி கிளப் மாவட்ட கவனர் திரு. ஆர். ரவீந்திரனும், திருமதி சரோஜா ரவீந்திரனும் நேற்றுக் காலை கண்டிக்குச் சென்றனர்

இவர்கள் யாழ்ப்பாணம் ரோட்டரி கிளப் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம், செயலாளர் திரு. சி. வாமதேவன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடினார்கள். ரோட்டரி கிளப் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றபோது சகல உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

**வியாபாரம்பெருக விளம்பரம் செய்க**


சர்வதேச திரைப்பட அரங்கில் பாராட்டுப்பெற்ற படம். தென்னகத்திரைகளில் 100 நாட்களுக்கு மேல் ஓடிய வெற்றிச்சித்திரம்.

# யாழ்-வின்ஸர் திரையில்

தினசரி 4 காட்சிகள்

ஜெமினி கணேசன் ★ ஜெய்சங்கர்
ராஜஸ்ரீ ★ வெண்ணிற ஆடை நிர்மலா
நடித்த

# பூவா தலையா



KALANILAYA CAMBRIC
கலாநிலைய கேம்பிறிக்
WRITING PADS
'லெற்றர் பாட்ஸ்'

நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு

மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:

'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி — யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்காஸிய அமைதி முயற்சிகள் மீண்டும் ஸ்தம்பிக்குமா?

## புதிதாக உருவாகியுள்ள நிலைமை குறித்து கவலை

நியூயோர்க்,செப்.4

மேற்காஸிய அமைதி முயற்சிகள் மீண்டும் தடைபடக் கூடுமோ வென்று திரும்பவும் அச்சம் தலைதூக்கியிருக்கின்றது.

போர் ஒய்வு ஏற்பாடுகளை ஐக்கிய அரபுக் குடியரசு மீறியிருப்பதற்கான சாட்சியங்கள் கிடைத்திருப்பதாக அமெரிக்கா அறிவித்திருப்பதனுலும், போர் ஒய்வுப் பிரதேசத்தில் எகிப்தியர் குவிந்துள்ள ராணுவச் சாதனங்களை அப்புறப் படுத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி இஸ்ரேலியர் அமெரிக்காவைக் கேட்டிருப்பதாலும் இந்தநிலைமை உருவாகியிருக்கின்றது.

போர் ஒய்வு ஏற்பாடுகளை எகிப்தியர் மீறியிருப்பதற்கான சான்றுகள் கிடைத்திருப்பதாக அமெரிக்கா அறிவித்திருப்பதுடன் தன் ஆட்சேபங்களை எழுத்துமூலம் ஐக்கிய அரபுக் குடியரசுக்கு தெரிவித்துள்ளது சோவியத் யூனியனிடமும் அமெரிக்கா ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

மேற்காஸியாவில் எகிப்தியர் போர் ஒய்வு ஏற்பாடுகளை மூன்று விதங்களில் மீறியிருப்பதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. முதலாவதாக அதிக ஏவாயுதத் தளங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன. இரண்டாவது, ஏற்கனவே இல்லாத பகுதிகளிலும் இப்பொழுது ஏவாயுத தளங்கள் நிறுவப்பட்டுள்ளன: மூன்ருவதாக போர் நிறுத்தப்பகுதிகளில்ராணுவ நடமாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு அமெரிக்கா தெரிவித்துள்ளது, இது பற்றி இன்னும் எகிப்தியரின் விளக்கம்எதுவும் வெளியாகவில்லை.

இதற்கிடையில் இஸ்ரேல் பிரதம மந்திரி போர் ஒய்வு மீறுதல்கள் பற்றி கடுமையான ஆட்சேபனைகளை தெரிவித்திருக்கிருர். போர் ஒய்வு ஏற்படுவதற்கு முன்னர் இருந்த நிலைமை மீண்டும் ஏற்பட வேண்டும் என்றும், இதற்கான ஏற்பாடுகளை விரைவில் செய்யும்படியும் அவர் அமெரிக்காவை வற்புறுத்தியிருக்கிருர். போர் ஒய்வுக்கான யோசனைகளைத் தெரிவித்த நாடு என்ற வகையில் அமெரிக்கா இதனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கிறதென்று அவர் தெரிவித்துள்ளார்.

இதேசமயம் எகிப்துக்கெதிரான நடவடிக்கைகள் சம்பந்தமாக இஸ்ரேல் மந்திரி சபையில் ஏற்பட்டிருந்த நெருக்கடி தீர்ந்துவிட்டதாகவும் மந்திரிகளுக்கிடையில் மீண்டும் ஒறுமைப்பாடு உருவாகி விட்டதாகவும் தெரியவருகின்றது. எகிப்துக்கெதிராக நடவடிக்கை எடுப்பதில் மந்திரிசபையில் ஒருமித்த கருத்து உருவாகி விட்டதாக பாது காப்பு அமைச்சர் திரு தயான் கருத்து வெளியிட்டிருக்கிருர்.

### ஜோர்டான் மன்னர் நடவடிக்கை

ஜோர்டானில் அமைதியை ஏற்படுத்தும் முழு பொறுப்பையும் மன்னர் ஹுசேன் தமது மந்திரி சபையிடம் விடுத்திருக்கிருர். மன்னர் ஹுசேனின் உயிருக்கு உலை வைக்க எடுக்கப்பட்ட முயற்சியைத் தொடர்ந்து ஜோர்டானில் தொடர்ந்து யொரில்லாக்களுக்கும் அரசாங்கப் படைகளுக்குமிடையில் மோதல்கள் நடைபெற்று வருகின்றன இதனுல் அம்மானிலும் நாட்டின் இதர பாகங்களிலும் அமைதி குறைந்துள்ளது. இந்த நிலைமையைக் கட்டுப்படுத்து வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி மன்னர் ஹுசேன் மந்திரிசபைக்கு உத்தரவிட்டிருக்கிருர்.

இதற்கிடையில் அரசப் படைகள் அம்மான் நகரிலிருந்து அப்புறப் படுத்தப்படும்வரை அரசாங்கத்துடன் எதுவிதத் தொடர்புகளும் வைத்துக் கொள்வதில்லை யென்று பலஸ்தீன விடுதலை இயக்கமான அல்பத்தாஹ் முடிவு செய்திருக்கின்றது.

### ஆபிரிக்க நாடுகள் ஆதரவு

மேற்காஸியாவில் அமைதியை ஏற்படுத்துவதற்காக ஐ.நா.விசேஷப் பிரதிநிதி டாக்டர் குனர் ஜாரிங் எடுத்துவரும் முயற்சிகளுக்கு பூரண ஆதரவு அளிப்பதாக அடிஸ் அபாபாவில் நடைபெற்ற ஆபிரிக்க நாடுகள் ஒற்றுமை ஸ்தாபனம் முடிவுசெய்திருக்கின்றது.

மேற்காஸியாவில் இஸ்ரேலியர் பலவந்தமாக கைப்பற்றி வைத்துள்ள அரபுப் பிரதேசத்திலிருந்து அவர்கள் உடனே வெளியேறிச் செல்ல வேண்டும் என்றும் மாநாடு வற்புறுத்தியது.

# அமெரிக்காவை முதலில் கண்டுபிடித்தவர்கள் யார்?

சோவியத் நிபுணர்கள் வெளியிடும் தகவல்

## சம்பந்தம் எம். பி. கைது

சென்னை, செப் 4

பொலிசாரைத் தாக்கியதாகக் குற்றம்சாட்டப்பட்டு திமுக பழைய எம் பி திரு எஸ் கே சம்பந்தம் கைது செய்யப்பட்டார்.

தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவராக இருந்த திரு சம்பந்தம் திமுகழகத்திலிருந்து விலக்கப்பட்டதும் கைத்தறி நெசவாளர் சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் அவர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது.

இதற்குப் பிறகும் இவர் சங்கக் கட்டிடத்திற்குள் உள்ள தலைவருக்கான அறைக்குள் வந்து போய்க் கொண்டிருப்பதாக சங்க நிர்வாகிகள் பொலிசில் புகார் செய்தனர். பொலிஸ் காவலை மீறிச் செல்லும் போது ஒரு பொலிசை திரு சம்பந்தம் தாக்கினுர் என்றும் அதனுல் அவர்கைது செய்யப்பட்டார் எனவும் தெரியவருகிறது. பின்னர் அவர் ஜாமினில் விடுதலையானுர்,

— —

## விேனுபாவுக்கு சுகவீனம்

வார்த்தாகஞ்ச், செப் 4

பூமிதான இயக்கத் தலைவர் திரு விேனுபாவுக்கு நெருப்புக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு வாரகாலமாக அவர் காய்ச்சலில் அவதிப்படுகிருர் என்றும் மருந்து சாப்பிட மறுத்து வந்துள்ளார் எனவும் கூறப்படுகிறது.

மருந்து சாப்பிட தொடங்கியபின் விேனுபாவின் நாடித் துடிப்பும் வெப்ப அளவும் சீராக இருப்பதாகவும் பூரண ஒய்வு எடுக்குமாறும் டாக்டர்கள் கூறினர்,

— —

## இன்று இலவச திரைப்பட விழா

யாழ்ப்பாணம், சனி

ஜேர்மன் தூதுவராலயத்தின் இலவச கல்வித் திரைப்படவிழா இன்று மாலை 6.30 மணிக்கு ... கல்லூரியில் நடை...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைத் தலைவர்களுக்கு

## அண்டை நாட்டின் மீது ஆதாரமற்ற அச்சம் ஏன்?

### ராஜாஜி கவலை

சென்னை, செப்.4

இலங்கையின் சுபிட்சத்துக்காக பாடுபட்டு அந்நாடு தன்னிறைவுடன் விளங்க உழைத்தவர்கள் அங்குள்ள இந்திய இனத்தவர்கள். அவர்கள்மீது சிங்களம்பேசும் தலைவர்கள் அச்சத்தையும் பகைமை உணர்ச்சியையும் வளர்த்துக்கொள்வது வருந்தத்தக்கது.

இவ்வாறு திரு, ஸி. ராஜகோபாலாச்சாரியார் சுயராஜ்ய பத்திரிகையில் எழுதியுள்ளார்.

இந்திய இனத்தவர்களை வெளியேற்ற நினைப்பது தற்கொலைக் கொள்கையாகும். அவ்வாறு வெளியேற்றுவதாக இருந்தாலும் அதனை அமைதியான சீரான முறையில் அமுல்நடத்தவேண்டும். சிங்களம்பேசும் தொழிலாளர்கள் தங்களது சுறுசுறுப்பான உழைப்பின் மூலம் இந்திய தொழிலாளர்களுக்குப்பதில் இடம்பெறவேண்டும் இதுதான் நியாயமான கொள்கை என்று ராஜாஜி எழுதியுள்ளார்.

பாரதியார் பாடல்ஒன்று இலங்கையில் தடைசெய்யப்பட்டிருப்பதாக வெளியான செய்திபற்றி அவர் குறிப்பிடுகையில், கவிதையைரசிக்கும தன்மை இல்லை என்பதுடன் அண்டை நாட்டைப் பற்றி ஆதாரமற்ற அச்சம் கொண்டிருப்பதையும் குறுகிய மனப்போக்கையும் இது காட்டுகின்றது என்று குறிப்பிட்டுள்ளார்.

அண்டைநாடான இந்தியாவின் மக்களுடன் நேச உறவை வளர்த்துக்கொள்ள இலங்கையினுல் இயலாவிட்டால் சர்வதேச ஐக்கியம் ஏற்படுத்தும் லட்சியத்தை நிறைவேற்றுவதும் அப்பணியில் இலங்கை பங்குகொள்வதும் எவ்வாறு முடியும் என்று ராஜாஜி எழுதியுள்ளார்.

மாநகரசபை

## அங்கத்தவருக்கு ஆசிரியர் பதவி

காலி, வெள்ளி

காலி மாநகரசபை அங்கத்தவரான திரு. டபிள்யூ. ரி. ஒபயசேகரா நேற்று முதல் காலி வித்தியலோகா கனிஷ்ட பாடசாலையின் அதிபராக நியமனம் பெற்றுள்ளார். அரசாங்க ஊழியர்களுக்கு அரசியல் உரிமை வழங்கப்படுமென்ற அரசாங்கத்தின் கொள்கைக்கு அமைய இவருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

திரு. ஒபயசேகரா ஒரு சமாதான நீதவான். இவர் கடந்த அரசாங்கத்தினுல் அரசியலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஆசிரியர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவர். அண்மையில் நடைபெற்ற காலி மாநகரசபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் போட்டியிட்டு திரு. ஒபயசேகரா வெற்றிபெற்றவர்.

திரு. ஒபயசேகரா தமது பதவியை ஏற்கச் சென்ற போது ஊர்வலமாக அவர் அழைத்துச் செல்லப்பட்டார். உதவிக் கல்வியமைச்சர் திரு. பி.வை துடாவை, காலி மேயர் ஆகியோர் ஊர்வலத்தில் சென்றனர். தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் உதவி அமைச்சர் பேசினுர்.

அராலி கி. சபைக்குரிய

## 30 ஆயிரம் ரூபா அரசுக்கு மீதமாகும்?

அராலி, வெள்ளி

... கிராமத்திற்கு ஒரு தனிக் கிராம சபை வேண்டுமென்று ...சாங் ... த்தபோதிலும் இத்தீர்மானத்தை அராலிமக்களில் ஒரு பகுதியினர் ஏற்கமறுத்து அராலிக் கிராம சபைக்குக் ...

ஆசிரிய நியமனம்:

## 2 தடவையில் ஜி. சி .ஈ. சித்தி பெற்றவர்களுக்கு...

கோட்டை, வெள்ளி

மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் தராதரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் நியமனத்துக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இம்மாதம் 18-ம் திகதிக்கு முன்னராக, பிரதேச வித்தியாதிபதிக்குவிண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும்.

இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் ஜி.சி.ஈ. பரீட்சையில் சித்திபெற்றவர்களும், எஸ். எஸ். ஸி. பரீட்சையில் சித்திபெற்றவர்களும் இதற்கு விண்ணப்பிக்கலாம். சிங்களம், தமிழ், ஆங்கிலம், விஞ்ஞானம், வர்த்தகம், கைப்பணி, மனையியல், சங்கீதம், சித்திரம், விவசாயம் போன்ற பிரிவுகளுக்கு தனித்தனி விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. குறிப்பிட்ட பாடங்களில் திறமைச் சித்தி உட்பட இரண்டு திறமைச்சித்தி பெற்றிருத்தல் வேண்டும். (விபரத்துக்கு 28-8-70 திகதி 14,921-ம் இலக்க வர்த்தமானி) வயது: 18 தொடக்கம் 45 வரை.

நியமனத்துக்கு தெரிவு செய்யப்படும்ஒருவிண்ணப்பதாரி அவர் நியமிக்கப்படும் மாவட்டத்தில் சேவை புரிவதாகவும், எச்சந்தர்ப்பத்திலும் மாவட்டத்துக்கு வெளியே மாற்றம் கோரமாட்டாரெனவும் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும்.

## பிரசவ விடுதிக்குள் காடையர் அட்டகாசம்

கொழும்புத்துறை, வெள்ளி

கொழும்புத்துறை நெடுங்குளம் வீதியில் உள்ள பிரசவ விடுதிக்குள் குடிவெறியில் புகுந்த சில காடையர்கள் மருத்துவதாதியையும் அவருடைய 3 இளம் பெண் பிள்ளைகளையும் அவதூருகப் பேசி. அங்கிருந்த பொருட்களைச் சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளதாக பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. கரையூர் பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். இச்சம்பவத்துக்காரணமாகவிருந்த ஒருவர் வழக்குத் தொடரப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. பிரசவவிடுதியும் கடந்த சில தினங்களாக மூடப்பட்டுள்ளது.

— —

## 112-வது வயதில் மரணம்

அம்பன்,வெள்ளி

உடுத்துறையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கைம்பெண் சின்னக்குட்டி என்னும் வயோதிபமாது தனது 112-வது வயதில் நேற்று மரணமானுர். இவரது கணவன் கணபதிப்பிள்ளை 65 வயதிலேயே இறந்துவிட்டார்.

## கிருஷ்ண...

## இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், சனி

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அண்ணமலை இசைத்தமிழ் மன்றத்தின் பதினேராவது ஆண்டுத் தமிழிசை விழாவின் இன்றைய நிகழ்ச்சிகள்,

5-30 இசைக் கல்லூரி மாணவிகள்-பாட்டு, 6-00 சபா சதாசிவம் கோஷ்டியினர்-வில்லுப்பாட்டு, 7-15 தலைமையுரை: திரு. செ. தனபாலசிங்கம் (இளைப்பாறிய மாவட்டநீதிபதி),7-30 திரு. பொன். புஷ்பரத்தினம்-பாட்டு, திரு. அ சிவசாமி-வயலின், திரு. பொ ஆத்மானந்தா- மிருதங்கம். 9-00 ஸ்ரீ ஆர்.மூர்த்திஐயர், 10-30 திரு. ஆர். அரியநாயகம்- புல்லாங்குழல், ஸ்ரீ எஸ் சர்வேஸ்வர சர்மா-வயலின் திரு. ரி. பாக்கியநாதன்-மிருதங்கம்.

— —

## எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

சென்னை,செப்.4

இம்மாதம் 12ம், 13ம்திகதிகளில் சென்னையில் நடைபெறவிடுக்கும் மாநிலசுயாட்சி மகாநாட்டினை எதிர்த்து சோஷலிஸ கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மா...

# கண்டுபிடித்தவர்கள் யார்?

## சோவியத் நிபுணர்கள் வெளியிடும் தகவல்

மாஸ்கோ, செப். 4

அமெரிக்காவை உண்மையாகவே முதன்முதல் கண்டுபிடித்தவர்கள் ஆசியாக்காரர்கள்தான் என்று லெனின்கிராட் அறிஞர்கள் இருவர் கருதுகிறார்கள்.

''கிறிஸ்து பிறப்பதற்கு 1500ஆண்டுகளுக்கு முன்பே ஆசிய பூகோள வல்லுநர்கள் அமெரிக்கா என்றொரு கண்டம் இருப்பதை அறிந்திருந்தனர்'' என்று இந்த லெனின்கிராட் கீழ்த்திசை நிபுணர்கள் கூறுகின்றனர். திபெத்திய நூல்களில் காணப்படும் உலகின் மிகப் பழைய வரைபடங்களை இனம்கண்ட அவர்கள், இவ்வாறு கருதுகின்றனர். குறிப்பிட்ட பாணியில் அமைந்துள்ள இந்த வரைபடங்களை லெனின்கிராட் நிபுணர்கள் முன்பே அறிந்திருந்தனர். எனினும் அவற்றைப் புத்த முனிவர்களின் மர்மச் சித்திரங்கள் என்று அவர்கள் எண்ணியிருந்தனர்.

ஆனால், பண்டை திபெத்திய, இந்திய பூகோள சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்த பின்னர் 'கிழைக் கடலுக்கு அப்பாலுள்ள பசுமையான நாடு' அமெரிக்காவினைக் குறிக்கிறது என்று லெனின்கிராட் நிபுணர்கள் முடிவுக்கு வந்தனர்.

'டுபாக்கோ' (புகையிலை) என்ற அமெரிக்க வார்த்தை பற்பல கீழ்த்திசை மொழிகளில் இடம்பெற்றுள்ளது இதற்கு ஓர் உதாரணமாகும்'' என்று லெனின்கிராட் நிபுணர்கள் கூறுகின்றனர்

பண்டைக் கால வரைபடத்தில் கண்டுள்ள நாடுகள், கண்டங்களின் நிலையை, உலகின் முதல் பூகோள வல்லுநர்களான சுமேரியர்களும், சால்தியர்களும் குறிப்பிட்டுள்ளனர்.

## 'ஈழத்து டாக்டர் தலைமையில் பிரிட்டனில் ஆராய்ச்சி'

லண்டன், செப். 3

பிரிட்டனின் பிரதான வீட்டு விபத்துக்கள் காரணமாக ஆண்டுதோறும் பெருவாரியான உயிர்ச்சேதங்கள் நடைபெறுகின்றன. இவற்றின் காரணங்கள் என்னவென்பதை ஆராயும் பொறுப்பு ஈழத்து வைத்திய நிபுணர் ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

டாக்டர்சந்திராடீ பொன்சேகா தலைமையின்கீழ் 12 பிரிட்டிஷ் வைத்திய நிபுணர்களைக்கொண்ட கோஷ்டி ஒன்று மேற்கு இங்கிலாந்திலுள்ள பிறிஸ்டல் நகரில் இந்த ஆராய்ச்சியை மேற்கொள்ளும். அண்மையில் பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்ட வீதிவிபத்து ஆராய்ச்சித் திட்டமொன்றிலும் டாக்டர். பொன்சேகா பிரதான பங்கு வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

பிரிட்டனில் ஆண்டுதோறும் வீட்டு விபத்துக்கள் காரணமாக சராசரி 8000 பேர்வரை பாதிக்கப்படுவதாகமதிப்பிடப்பட்டுள்ளது. இவ்விபத்துக்களின்காரணங்களை ஆராய்ந்தறிந்தால் இவற்றை இலகுவாகத்தவிர்த்துவிடலாமென நிபுணர்கள் கருதுகிறார்கள்.

தாம் மேற்கொள்ளப்போகும் ஆராச்சி முடிவடைய ஒருவருட காலம் பிடிக்குமென்றும் அதன் பின்னர் ஒரு ஆராச்சி அறிக்கையைத் தயாரிக்கப்போவதாகவும் டாக்டர் பொன்சேகா தெரிவித்தார். நாளொன்றிற்கு இரு வீட்டு விபத்துக்கள் சகிதம் ஆராய்ச்சியைமேற்கொண்டு அதன் காரணங்கள் என்னவென்று தீர்மானிக்கப்படுமென அவர் மேலும் கூறினர்.

## 8 றப்பர் புதிய தொழிற்சாலை

கோட்டை, வெள்ளி

மத்திய றப்பர் தொழிற்சாலை யொன்றையும் ஏழு மாவட்ட றப்பர் தொழிற்சாலைகளையும் நிறுவுவதற்கு அமைச்சர் அவையின் அங்கிகாரத்தை பெருந்தோட்டத் தொழில் அமைச்சர் டாக்டர் கொலவின் ஆர். டி. சில்வா கோரியுள்ளார்.

மத்திய றப்பர் தொழிற்சாலை றப்பர் உற்பத்திக்கான நவீன யந்திரசாதனங்களை உபயோகிக்கும். இந்த நவீன யந்திர சாதனங்களை அமைச்சர் சோஷலிச நாடுகளின் உதவியைநாடிப் பெறுவார்எனத் தெரியவருகிறது. றப்பர் உற்பத்தித் தொழிலில் ஆராச்சிகளையும் இந்த மத்திய நிலையமே கவனிக்கும்.

## தொழிலாளர் சபைகளின் நோக்கம்

கோட்டை, வெள்ளி

இலங்கை போக்கு வரத்துச்சபையில் தொழிலாளர் சபைகள் நிறுவுவதன் நோக்கம் நாட்டின் பல்வேறு டிப்போக்களிலும் சபையின் பிரிவுகளிலும் அலுவல்கள் தடையின்றிச் சிராக நடைபெறச் செய்தலேயாகும்.

இ.போ. ச. தலைவரோடும் நிர்வாக அதிபர்களோடும் பேச்சுவார்த்தை நடாத்திவிட்டு பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில்போக்குவரத்து அமைச்சர் திரு. லெஸ்லிகுணவர்த்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது: ஐக்கிய முன்னணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டபடி தொழிலாளர் சபைகளை அமைப்பதற்கு அரசாங்கம் அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதன்படி இ. போ. சவே முதலாவது தொழிலாளர் சபையை அமைக்கவிருக்கிறது. தொழிலாளர்சபையில் அமைக்கப்படும் தொழிலாளர் சபைகளுக்கு முன்னோடியாக விருக்கவேண்டும்.

## நவயுக இளைஞர் ஒன்றியம்

பூநகரி, வெள்ளி

பூநகரி நவயுக இளைஞர் ஒன்றியத்திற்கான அங்குரார்ப்பணக்கூட்டம் பூநகரி காரியாதிகாரி திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் பூநகரி காரியாதிகாரி சந்தோர் ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு பூநகரிப்பகுதியின் பல பகுதிகளிலும் இருந்து நூற்றுக்கான இளைஞர்கள் வந்திருந்தனர். பூநகரிக் காரியாதிகாரி இவ்வியக்கம் ஆற்றவேண்டிய சேவைகள் பற்றி விரிவாக எடுத்து விளக்கினர். நிர்வாகிகள் விபரம் வருமாறு.

தலைவர்: திரு. நடராசா, செயலாளர்: திரு. ச. நாகேஸ்வரன், இணைச்செயலாளர்: திரு. ந. சூரியகுமாரன், பொருளாளர்: பொன் விநாயகமூர்த்தி.

ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒவ்வொரு நிர்வாக உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம், சனி

ஜேர்மன் தூதுவராலயத்தின் இலவச கல்வித் திரைப் படவிழா இன்றுமாலை 6 30 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

எம். பி.க்களின் லிகிதர்களுக்கு

## அரசாங்கம் சம்பளம்வழங்கும்

கோட்டை, வெள்ளி

ஆட்சிமன்ற அங்கத்தவர்களுக்கு லிகிதர்களை அரசாங்கச் செலவில் நியமிக்க மந்திரிசபை தீர்மானித்துள்ளது.

ஆட்சிமன்ற அங்கத்தவர்களுக்கு தற்போது அரசாங்கம் அவர்கள் தங்களுக்கு லிகிதர்களை வைத்திருப்பதற்கு 100 ரூபா லிகிதர் படியாகக் கொடுக்கிறது.

ஒரு லிகிதர் 100 ரூபா சம்பளத்தில் வாழ்க்கை நடாத்தமுடியாதென அரசாங்கத்திற்குப் புகார் தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்தே மேற்கண்டவாறு அரசாங்கம் தீர்மானித்துள்ளது

பருத்தித்துறை ந. ச.

## "குப்பைகளை வளவுக்குள் புதையுங்கள்"

அம்பன், வெள்ளி

நகரசபைக்குச் சொந்த மானட்ராக்டர் லொறி, கசாப்புக்கடை ஆகியன சில விஷமிகளால் தீக்கிரையாக்கப்பட்டதினால் நகரைச் சுத்தஞ் செய்ய வாகனங்கள் தொழிற்படும் வரையும்வீட்டுத் தோட்டங்களிலேயே குப்பைகளைப் புதைக்கும்படி பருத்தித்துறை நகரப் பொதுமக்களுக்கு பருத்தித்துறை நகரசபைத்தலைவர் வ. தர்மலிங்கம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

பழைய நிர்வாகத்தினர் நிர்வாககாலத்தில்நகரசபை மீது திணிக்கப்பட்ட வரவு செலவுக் கட்டுப்பாடு இன்றும் தொடர்ந்திருப்பதால் மக்களுக்கு பூரண சேவையைச் செய்யமுடிய வில்லை மக்கள் அரசாங்கம் நகரசபைக்கு புதிய வாகனங்கள் வாங்குவதற்கு கடன் தர இணங்கியிருக்கின்றது. எனவே உங்களுக்கு மிக விரைவில் புதிய வாகனங்கள், நவீனசந்தை சீர்திருத்திய மின் விநியோகம் செம்மையான வீதிகள் ஆகியன கிடைக்க விருக்கின்றன'' என்று அவர்தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## அரசுக்கு மீதமாகும்?

அராலி, வெள்ளி

அராலிக் கிராமத்திற்கு ஒரு தனிக் கிராம சபை வேண்டுமென்று அரசாங்கத்துடன்வாதாடிய அராலி ந உரிமைச் சங்கம், கிராம சபை அலுவலகம் அமையவேண்டிய இடத்தையும் முன்னேற்பாடாகக் குறிப்பிட்டிருந்தது. அராலிக் கிராம் சபை உருவானதும், சபையினர் பிறிதோர் இடத்தைத் தெரிவுசெய்து, அந்த இடத்தில்காணிகொள்வனவு செய்து அரசாங்க நன்கொடைபெற்று கட்டிடம் அமைப்பதெனத் தீர்மானித்தபோதிலும் இத்தீர்மானத்தை அராலிமக்களில் ஒரு பகுதியினர் ஏற்கமறுத்து அராலிக் கிராம சபைக்குக் காணியும் கட்டடமும் தமது சொந்தச் செலவில் அமைத்து வழங்குவதென யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மகஜர் மூலம் தெரிவித்துள்ளனர். இதன் மூலம் அரசாங்கத்திற்கு மீதமாகும் 30 ஆயிரம் ரூபாவையும் பிரஸ்தாப கிராம சபை சார்பில் ஏற்பது பற்றி உதவி ஆணையாளர் ஆராய்ந்து வருவதாகத் தெரிகிறது.

கணபதிப்பிள்ளை 65 வயதிலேயே இறந்துவிட்டார்.

## கிருஷ்ணா நதிக்கு 100பேர்பலி

பெங்களூர் செப். 4

மைசூரில்கிருஷ்ணாநதியில் வள்ளம் ஒன்று கவிழ்ந்ததில் சுமார் 100 பேர் பலியாகியிருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை, செப். 4

இம்மாதம் 12ம், 13ம்திகதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கும் மாநிலசுயாட்சி மகாநாட்டினை எதிர்த்து சோஷலிஸ கட்சியினர் ஆர்ப்பாட்டம் நடத்தத் தீர்மானித்துள்ளனர்.

சோஷலிஸ்ட் கட்சியினர் எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதி வழங்குமாறு சென்னை மாவட்ட தி. மு. கழகம் தலைமைகழகத்தைக் கேட்டுள்ளது.

இதனால் தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை அவர்கள் அறிய ஒருசந்தர்ப்பம் அளிக்கப் பட்டதாயமையும் என சென்னை மாவட்ட தி. மு. கழக பிரதிநிதிகள் கூட்டத்தில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

## தனியார் வீட்டில் இலவசப் பால்மா விநியோகம்?

கொழும்புத்துறை, வெள்ளி

கொழும்புத்துறை கிழக்கில் சுகாதாரப்பகுதியினரால் வழங்கப்படும்குழந்தைகளுக்கான இலவச பால்மா உணவு தனியார் வீடொன்றில் வைத்து வழங்கப்படுகிறதாம். இதனால் அப்பகுதியில் உள்ள அநேக குழந்தைகள் அங்குசென்று பால்மா உணவைப் பெறமுடியாமல் இருக்கின்றனர்.

இதனை ஆட்சேபித்து கொழும்புத்துறை ஜனசமூக நிலையத்தினர் மாவட்ட சுகாதார அத்தியட்சகரிடம் புகார் செய்துள்ளனர் பொதுஇடமாகிய ஜனசமூக நிலையத்தில் வைத்து பால்மாவை விநியோகிக்கும்படி அவர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## ஒரு மாதக் கடூழியம்

முல்லைத்தீவு, வெள்ளி

முல்லைத்தீவு குமுளமுனையைச் சேர்ந்த கந்தவனம் சிவராசா என்பவர் அம்பலவன் பொக்கணைக் கிராம சேவையாளரானஇராசையா செல்லத்துரை என்பவரைத் தாக்கியதாக முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு முல்லைத்தீவு நீதிபதி திரு. திசநாயக்கா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி எதிரிக்கு ஒரு மாதக் கடுங்காவல் சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார். அப்பீல் செய்வதானால் ரூபா250/- பிணையில்செல்லுமாறு உத்தரவிட்டார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

மனிதனுடைய சிறப்புகளை வெளிப்படுத்தும் வாய்ப்பினைசமுதாயம் நல்கவேண்டும். அப்போது தான் மனிதனுடைய ஆற்றலைவெளிப்படுத்தச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டதாயமையும்.

—மகாத்மா காந்தி

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம் 20-ந் திகதி (5-9-70)

## மேற்கு ஆசியாவும் லுசாக்கா மகாநாடும்

மேற்கு ஆசியப் பிரச்னைக்கு ஓர் அமைதித் தீர்வு காணும் பொருட்டு அமெரிக்கா சமர்ப்பித்த திட்டத்தின் அடிப்படையில் அங்கு தொண்ணூறு நாள் போர் ஓய்வுக்கு இருதரப்பினரும் ஒப்புக்கொண்டனர். ஆயினும் போர் நிறுத்தத்தை மீறியதாக இருதரப்பினரும் பரஸ்பரம் குற்றச்சாட்டுத் தெரிவித்து வந்தனர். குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்ட போதிலும் எப்படியும் அங்கு அமைதியேற்படுத்தப்படுமென்ற நம்பிக்கை ஏற்பட்டது. ஐ. நா. தலைமைக் காரியதரிசியும் இதில் நம்பிக்கை கொண்டிருந்தார். ஆனாலும் அரபு நாடுகளின் ஆதரவையும் ஆசியையும் பெற்றுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கமான அரபுக் கொமாண்டோக்களின் நடவடிக்கைகள் அரபு நாடுகளுக்கிடையிலேயே ஐக்கியமில்லையென்ற ஒரு வித நிலையை ஏற்படுத்துவதாக இருக்கிறது. இதே சமயம் இஸ்ரேல் அமைச்சரவையிலும் கூட 'சமாதானத் திட்டம்' சம்பந்தமாகப் பிளவேற்பட்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலைகளைக் கொண்டு பார்க்கையில் மேற்காசிய நெருக்கடியைத் தீர்ப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் மீண்டும் ஸ்தம்பித நிலையடையலாமென்றே தோன்றுகிறது.

உலகில் எந்தப் பகுதியில் எந்த நாடுகளுக்கிடையிலும் கருத்து வேற்றுமையேற்பட்டு அது மோதலாக மாறும் பொழுது போர் நிறுத்தத் தீர்மானம் ஐ நா வில் நிறைவேற்றப்படுகிறது. இயன்ற வரையில் இத் தீர்மானம் செயல்படுத்தப்படுகிறது அதாவது போர் நிறுத்தம் செயல்படுத்தப்படுகிறது. அதுவும் போர் நிறுத்தத்தை மீறுவதாகப் பரஸ்பரக் குற்றச்சாட்டுக்களின் இடையில் தான் தீர்மானம் செயல்படுத்தப்படு

மேற்காசியாவில் அமைதியேற்படுத்த வல்லரசுகள் முயற்சி மேற்கொண்டபோதிலும் இஸ்ரேலியர்களுக்கும் அராபியர்களுக்கும் ஆயுதங்கள் வழங்குவதில் வல்லரசு நாடுகள் பின்னிற்கவில்லையே.

மேற்காசியப் பிரச்னை வியட்னும், கம்போடியா தென்னுபிரிக்காவுக்கு மீண்டும் பிரிட்டன் ஆயுதங்களை ஏற்றுமதி செய்வதுபோன்ற உலக அமைதியைப் பாதிக்கக்கூடிய முக்கிய பிரச்னைகள் பற்றி இம்மாதம் 8-ந் திகதி ஸாம்பியா தலைநகரான லுசாக்காவில் நடைபெறும் நடுநிலைமை நாடுகளின் மகாநாட்டில் விவாதிக்கப்படவிருக்கின்றன. வல்லரசுகளைக் கண்டிப்பதாலும் தீர்மானங்கள் நிறைவேற்றுவதாலும் நடுநிலைமை நாடுகள் எதையும் சாதித்துவிட முடியுமா?

லுசாக்கா மகாநாட்டில் சுமார் அறுபது நாடுகள் கலந்துகொள்ளவிருக்கின்றன. இவை யாவும் எந்த வல்லரசுக் கோஷ்டியிலும் சேராத நடுநிலைமைக் கொள்கையைப் பின்பற்றும் நாடுகளென்று தம்மைப் பிரகடனப்படுத்தியிருப்பவை

இந்த நாடுகள் அந்நியரின் நீண்டகால ஆதிக்கத்திலிருந்து சமீபத்தில் தான் விடுதலையடைந்தவை வேண்டா வெறுப்பாக விட்டுச்சென்ற அந்நியர் உருவாக்கிவிட்ட சதிச் சகதியில் சிக்கித் தடுமாறுகின்ற நிலையிலுள்ளவை. அந்நியரின் தந்திரம் பற்றியும் வல்லரசுகளின் கெடுபிடி நடவடிக்கைகள் பற்றியும் பேசித் தீர்க்கும் இந்த நடுநிலைமை நாடுகள் எந்த வகையில் தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தியிருக்கின்றன?

மேற்காசியப் பிரச்னை

# அரசியல் விடுதலைதான் ஆன்மீக பொருளாதாரவிடுதலை இல்லையே!

கன்யா குமரியில் ஒரு கோடி ரூபாய் செலவில் சுவாமி விவேகானந்தருக்காகக்கட்டியுள்ள அதிசய கோயிலைக்கண்டேன். நேரில் அல்ல. படத்தில்தான் தமிழகப்பத்திரிகைகளில் வெளியாகியுள்ள இப்படத்தைக் கண்டதுமே அந்தச்சின்னம் மனதைக்கவர்ந்தது. இதனுல் கன்யாகுமரிக்கே ஒரு புது அழகும், மதிப்பும் ஏற்படுவதாக உணர்ந்தேன். ஏற்கெனவே மகாத்மா காந்திக்காக அங்கு ஒரு மண்டபம் கட்டியுள்ளார்கள் அதைவிட இந்தக்கோவில் அதிக கவர்ச்சியாகவுள்ளது.

சுவாமி விவேகானந்தரின் திருவடிகள்பட்ட அந்தப் புனிதக்குன்று, கடலில் சற்றே ஒதுங்கியுள்ளது. சுவாமி அவர்கள் கரையிலிருந்து அங்குநீந்திச்சென்று பாரதமக்களின் விமோசனத்துக்காக தியானம் செய்தாராம் அம்மக்கள் அரசியல் விடுதலைபெற்றனர். அரசியல் விடுதலைபெற்றபின், இச்சமயம் இந்தியாவிலும் சிறப்பாக சுவாமியின் பிறப்பிடமாகிய வங்காளத்திலும் ஏற்பட்டுள்ள பலாத்கார அசுர நிலைமைபற்றி சுவாமிகள் இன்றிருப்பின் என்ன சொல்வார்களோ?

அரசியல் விடுதலை பெற்றுலும் மக்கள் இன்னும் ஆன்மீக, பொருளாதார விடுதலை பெறவில்லை. ஆன்மீக அடிப்படையில் பொருளாதார விடுதலைபெற வேண்டிய பெரியவேலை இன்னும் காத்திருக்கிறது. இந்திய ஜனுதிபதியான கிரி அவர்கள் அங்குசென்று இந்த நினைவுச்சின்னத்தைத் திறந்து வைத்துப்பேசியுள்ளார். பிரதமர் இந்திராகாந்தியும் லூஸாகா மகாநாட்டிலிருந்துதிரும்பியதும், இங்கு வந்து தரிசிக்கப் போவதாகத் தெரிகிறது இன்னும் பல தலைவர்களும் வரலாம் ஏனையோர்களும் இனி சென்று பார்க்கலாம். ஆனால் இது வெறும் வேடிக்கையல்ல அந்தப் புனித இடத்தில் நாட்டின் தலைவர்களும் ஏனையோர்களும் செல்லும்போது அமைதியாக இருந்து, சிறிது தியானம் செய்தால், சுவாமிகளின் அருளால் மனம் தூய்மையாகி, பொதுமக்களின் விமோசனத்துக்கு என்ன செய்யவேண்டுமென்ற எண்

''ஆகவேஉணருங்கள் இனி வரவிருக்கும்என் சீர்திருத்தவாதிகளே! தேசாபிமானிகளே! நீங்கள் உணருகிறீர்களா? இன்று லட்சக்கணக்கானவர்கள் உண்ண உணவின்றி பட்டினி கிடப்பதையும், வெகுகாலமாகப் பட்டினி கிடந்து வருவதையும் நீங்கள் உணருகிறீர்களா? அறியாமை ஒரு கரியமேகம் போல் நாட்டைக்கவிழ்ந்து கொண்டதை உணருகிறீர்களா? ஏழைகள், நோயாளர்கள், பல வீனர்கள் இவர்களது உள்ளத்திலுள்ள சிவபெருமானை வழிபடுங்கள்'' என்று முழங்கினுர் அவர் (ராமேஸ்வரத்தில் சுவாமிகள் ராமநாதபுரம் ராஜாவின் முன்னிலையில் இப்படிக் கூறியதும், மறுநாளே ராஜா அவர்கள் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு அன்னதானம் செய்ததாக ரோமைன் ரோலண்ட் எனும் பிரெஞ்சு அறிஞர் எழுதிய நூலில் குறிப்பிட்டிருக்கிருர். ஒருநாள்ஒரிடத்தில் மட்டும் உணவளித்தால் போதுமா?

இம்முறை நல்லூர் தேர்த் திருவிழாவை தரிசிக்கும் புண்ணியம் எனக்குக்கிடைக்கமுடியவில்லை மிக அதிகமான பக்தர்கள் வந்து வழிபட்டதாக அறிந்தேன் காரைநகர். நயினுதீவு முதலிய இடங்களில் திருவிழாச் சமயத்தில் அன்னதானம் செய்வது போல், நல்லூரிலும் புண்ணியவான்கள் பலரும் சேர்ந்து அவ்விதமே செய்ய முடியாதா?

## கேரளப்பெண்கள் ஏற்றுமதி;

ஐரோப்பிய நாடுகளிலே ''அடிமை வேலை'' களுக்காகக் கேரளப்பெண்களை 'ஏற்றுமதி' செய்வதைப் பற்றியும், அப்பெண்கள் அங்குபட்ட கஷ்டங்களைக் குறித்தும், பல சோகக்கதைகளை இந்தியா திரும்பிய சில பெண்கள் தெரிவித்துள்ளார்கள்.

''இத்தாலியில் எங்களுக்குக் கொடுக்கப்பட்ட உணவு வயிற்றைக் குமட்டியது வாந்தி எடுத்தால், 'கன்னத்தில்' அறைவார்கள். மென்னியைப்பிடித்து, எடுத்த வாந்தியைத் திருப்பிச்சாப்பிடச் செய்வர், வாந்தி எடுத்ததை விழுங்கினுல், பின்னர் வாந்தி வராது என்றனர்.

சுமார் 8000 பேருள்ள பைத்திய ஆஸ்பத்திரியிலே எங்களை வேலைக்கு அனுப்பினர். பைத்தியங்களில் சிலர் சங்கிலியால் கட்டப்பட்டிருந்தனர். வேறுசிலர் காமவெறியர்களாக இருந்தனர். பாரி எனுமிடத்தில் பைத்தியங்களை கடற்கரையில் பராமரிப்பின்றி விட்டுவிட்டனர். கடலிலிருந்து கரைக்கு வந்த நண்டுகளைப் பிடித்து உயிருடனேயே அவர்கள் சாப்பிட்டனர்!

வேலை அதிக கடுமையாக இருப்பதாக ஏதும் புகார் செய்தால் ''உங்கள் ஒவ்வொருவருக்கும் ஆறு ஆயிரம் ரூபாய்வரை உங்கள் பெற்ருேர்களுக்கு அனுப்பி வைத்தோம். உங்கள் பெற்ருேர்கள் பணம் வாங்கும் போது இதை உணர்ந்திருக்க வேண்டும்'' என்று பதிலளிப்பர்.

வேண்டும் என்றும் இந்தியாவில் பலத்த கருத்து நிலவுகிறது. லோக்சபையில் இதுபற்றி மிகக் காரசாரமான விவாதம் நடந்துள்ளது.

0 0 0

இராமாயண காவியம் எழுதிய வால்மீகி ஒரு பிராமண ரிஷியாம். அதனுல் தான் அவர் தம்மவரான இராமனைப்பற்றி மிக உயர்வாகவும், இராவணன் முதலிய வேறு நாட்டவரைப் பற்றி இழிவாகவும் எழுதியுள்ளதாக ஒருவர் ''டைம்ஸ்'' பத்திரிகையில் எழுதியுள்ளார்.

## வால் மீகி பிராமணனு?

வால்மீகியின் சரித்திரம் அவருக்குத் தெரியாது போலும். வால்மீகி முதலில் ஒரு வேடன். காட்டு வழியாக வருபவர்களை மறித்து அடித்துப் பறித்துப் பிழைத்து வந்தான், ஒருநாள் நாரதர் அக்காட்டுவழியே வந்தபோது அவரை வேடன் மறிக்கவே, நாரதர் அவனுக்குப்புத்திகூறி உபதேசித்தார். ''ராம ராம'' என்று கூற முடியாததால் ''மரா மரா'' என்று அவனை ஜபம் செய்யச் சொல்லவே, அவ்வேடன் அப்படியே வெகுகாலம் தவம் செய்தான். ஒரு புற்று அவர்மீது வளர்ந்தது ஞானம் உதயமாயிற்று. வல்மீகம் என்ருல் புற்று. புற்று வளர்ந்ததால் வால்மீகி என்ற பெயர் அவருக்கு ஏற்பட்டது. இராவணன் ஒரு பிராமணன் இராமர் க்ஷத்திரியர். இராமாயண ஆராய்ச்சி செய்பவர்கள் இதை அறிந்திருந்தால் அவ்விதம் தவறாக எழுதமாட்டார்களல்லவா?

0 0 0

இலங்கையில் பிரஜைகளாகாதவர்கள் மீண்டும் இந்தியாவில் குடியேறி இந்தியப் பிரஜைகளாக முடியுமா? இந்தியாவிலுள்ள இடங்கள் வசித்து அங்குள்ள இலங்கை ஹைகமிஷன் காரியாலயம் சென்று இலங்கைப் பிரஜா உரிமையைத் தாங்களே இஷ்டப்பட்டு விடுவதாகக்கூறி, அதற்கு ஓர் அத்தாட்சிப் பத்திரம் பெற்று நாடற்றவர் ஆன பின்னரே, இந்தியப் பிரஜா உரிமைக்கு மனுச்செய்ய அவர் தகுதிபெறுவாராம் அந்த மனுவின்மீது, இந்திய அரசாங்கம் பின்னர் முடிவுசெய்யும் என்று தெரிகிறது

வெளிநாடுகளில் குடியேறிய இலங்கைப் பிரஜைகளுக்கு இனி தொடர்ந்து பென்ஷன் அனுப்பவேண்டுமாயின், அவர்கள் அந்நாடுகளில் பிரஜைகளாகவேண்டுமென்று இலங்கை அரசாங்கம் புதிய உத்தரவுபோட்டுள்ளதால் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஒரு புதியகவலை ஏற்பட்டுள்ளது. இதைப் பற்றி விசாரித்தபோது மேற்கூறியவிபரம் தெரியவந்தது.

0 0 0

நன்றுடையானைத் தீயதி
லானை நரைவெள்ளேறு
ஒன்றுடையானை உமை
யொரு பாகமுடையானைச்
சென்றடையாத திருவுடை
யானைச் சிராப்பள்ளிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோப்பாயில்

## இரவு 11 மணிக்குப் பின் வெளிச்சம் தரும் மின் விளக்குகள்

யாழ்ப்பாணம், சனி

கோப்பய் கிராமத்தில் மின்விளக்குகள் இருந்தும் வெளிச்சம் இல்லாத நிலை கடந்த சில நாட்களாக நீடித்து வருகிறது.

ஒவ்வொரு நாளும் மக்களெல்லோரும் உறங்கியபின் இரவு பத்து பதினுெருமணிக்குப் பின்னரே மின்சாரம் இங்குவருகிறதாம் இதனுல் இப்பகுதியிலுள்ள வீதிகளிலும் வீடுகளிலும் பொருத்தப்பட்ட மின்விளக்குகள் அதுவரையும் தூங்கிவழிகின்றன. பெருந்தொகையான பணம் முதலீடுசெய்து பெறப்பட்ட மின்விளக்குகளால் எதுவிதபயனும் பெறமுடியவில்லையே என இப்பகுதிமக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

இரவு பதினுெருமணிவரை இக்கிராமம் முழுவதும் இருள்சூழ்ந்து காணப்படுகிறது.

## பதில் அமைச்சர்கள் சத்தியப்பிரமாணம்

கோட்டை, வெள்ளி

பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவின் வெளிநாட்டுப் பயணத்தையொட்டி அவருக்குப் பதிலாக நீர்ப்பாசன மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு. மைத்திரிபாலசேனநாயக்கா அவருடைய அலுவல்களைச் செய்ய இன்று பிரமாணம் எடுத்துக்கொண்டார்.

பிரதமருடன் லுசாக்கா மகாநாட்டில் கலந்துகொள்ளச் சென்ற திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் அலுவல்களை அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. நீல்டி. அல்விஸ் செய்வார். அதற்கான பிரமாணத்தையும் அவர் எடுத்துக்கொண்டார்.

வெளிநாடுகளுக்குச் செல்லும் அமைச்சர்களுக்கு பதிலாக கடமையாற்றுவதற்கு சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்ட மற்ருேர்கள் விபரம் வருமாறு:

திரு. ரட்னே தேசப்பிரிய சேனநாயக்கா (திட்ட பொருளாதார அமைச்சு) திரு பி ஆர். இரத்னுயகா (உள்நாட்டு, வெளிநாட்டு வர்த்தக அமைச்சு)

கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி சுபசிங்கா நாளை ஜப்பான் செல்லவிருப்பதால் அவருக்குப் பதிலாக கைத்தொழில் அமைச்சின் காரியதரிசி திரு எஸ். கே. சூரியாராய்ச்சி நாளை சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொள்வார்.

## உருக்குக் கூட்டுத்தாபன ஊழியர் ஆர்ப்பாட்டம்

கோட்டை, வெள்ளி

நூற்றுக்கணக்கான உருக்குக் கூட்டுஸ்தாபனஊழியர்கள்கைத்தொழில்விஞ்ஞான விவகார அமைச்சரின் காரியாலயத்தின் நேற்று முன் ஆர்ப்பாட்டம் செய்தனர். கூட்டுஸ்தாபனத் . தலைவர் திரு சார்ள்ஸ் அபயசேகரா பொதுமுகாமையாளர் திரு. பி பி மாணிக்கம் மற்றும் உயர்தர அதிகாரிகளை பதவியிலிருந்து நீக்கும்படி இவர்கள் கோரினர்.

ஆர்ப்பாட்டம் நடைபெற்ற போது அமைச்சரோ நிரந்தரக்காரியதரிசியோ கூட்டுத்தாபனத்தலைவர் திரு. சாள்ஸ் அபயசேகராவோ காரியாலயத்தில் இருக்கவில்லை.

சங்கானை, வெள்ளி

நாட்டைக் காக்கும் நிதிக்கு சங்கானை அரசினர்

## கலைக்கப்பட்டது

கண்டி, வெள்ளி

கண்டி மாநகரசபை கலைக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாநகரசபை சட்டதிட்டங்களுக்கு அமைய அது செயல்படவில்லையென்றும் கடந்த சில காலமாக தவறுகள் ஏற்பட்டுவருவதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ஆலயப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துச் செய்ய உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நடவடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சர் முன்வந்திருப்பதாகவும்

செயல்படுத்தப்படுகிறது அதா வது போர் நிறுத்தம் செயல் படுத்தப்படுகிறது. அதுவும் போர் நிறுத்தத்தை மீறுவ தாகப் பரஸ்பரக் குற்றச்சாட் டுக்களின் இடையில் தான் தீர்மானம் செயல்படுத்தப்படு கிறது. போருக்கு எப்படி அந்நிய வல்லரசுகள் தங்கள் சுயநலம் காரணமாக உதவி யும் ஊக்கமும் அளித்துவரு கின்றனவோ அதேபோல் போர்நிறுத்தத்தையும் மீண் டும் உக்கிரமான போருக்கு, இருபகுதியினரையும் தயார் படுத்துவதற்கு உதவியும் ஊக்கமும் அளிப்பதற்கு ஒரு இடைக்கால ஏற்பாடாகவே பயன்படுத்தி வருகின்றன என்பது கடந்த காலச் சம் பவங்களிலிருந்து இப்போது நடைபெற்றுவரும் நிகழ்ச்சிக ளிலிருந்தும் கணிக்கக்கூடிய தாக இருக்கிறது

போர் தொடங்கியதும் ஆயு தங்கள் வழங்குவதை நிறு த்தி வைக்கும் வல்லரசுகள் போர் நிறுத்தம் ஏற்பட்டதும் சேதமடைந்த ஆயுதங்களுக் குப் பதிலாக புதிய ஆயுதங் கள் வழங்குவதிலும் தாங் கள் கொடுத்த ஆயுதங்கள் ஏன் சரியாகச் செயல்பட வில்லையென தமது நிபுணர் களை அனுப்பி ஆராய்ந்து அவற்றைச் சரியாகச் செயல் படுத்துவதற்கும் ஆயுதங்க ளின் உற்பத்தியில் மாற்றம் செய்வதற்கும் மேற்கொள் ளப்படும் முயற்சி இதற்கு உதாரணம்.

வடிக்கைகள் பற்றியும் பேசித் தீர்க்கும் இந்த நடுநிலைமை நாடுகள் எந்த வகையில் தமக்குள் ஒற்றுமையை ஏற்படுத்தி யிருக்கின்றன?

மேற்காசியப் பிரச்னை காரணமாக சூயஸ்கால் வாய்ப் போக்குவரத்துத் தடை செய்யப்பட்ட தால் இலங்கைபோன்ற சிறிய நாடுகளின் பொரு ளாதாரம் வெகுவாகப் பாதிக்கப் பட்டிருக்கிறது. இந்த நிலையிலும் கூட நடுநிலைமை நாடுகள் எந்த அளவில் ஒன்று சேர்ந்து நடவடிக்கை எடுத்திருக் கின்றன?

நடுநிலைமை நாடுகளைப் பொறுத்தவரையில் மகா நாடு கூட்டி வல்லரசுக ளைக் கண்டிப்பதில் பய னில்லை. வல்லரசுகளின் பிடிக்குள் சிக்காமல் தங் களுக்குள் ஒத்துழைப்பை யும் ஒற்றுமையையும் ஏற்படுத்திக் கொண்டு எந்தப் பிரச்னையிலும் வல் லரசுகள் தலைப்போடாத உறுதியான பொருளா தாரக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வதே விவேகம். இதன் மூலம்தான் வல் லரசுகளையும் வழிக்குக் கொண்டுவரவும் முடியும். லுசாக்கா மகாநாடு இதற்கு வழிகாணுமா?

# செம்மறி ஆடுகளை வளர்க்க அரசு முன்வரவேண்டும்

## தென்னை பயிரிடுவோர் சங்கம் மகஜர்

யாழ்ப்பாணம், சனி

'செம்மறி ஆடுகளைப் பேணிக் காப்பதற்கு உதவ அரசாங்கம் முன்வரவேண் டும். தென்னந் தோட்டங் களில் செம்மறி ஆட்டுப்பட் டிகளை கட்டுவதால் தென் னங் கன்றுகள் செழித்து வளரும்'

ஆனைவிழுந்தான் தென்னை பயிரிடுவோர் கூட்டுறவுச் சங்கம் யாழ். மாவட்ட விவ சாய அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இவ் வாறு தெரிவித்துள்ளது.

'ஆட்டுப்பட்டிகளை விஸ்த ரிக்கும் முறை எமது நாட் டில் படிப்படியாகக் குறை ந்து கொண்டே போகிறது. இதை அதிகரிக்கச் செய்ய அரசாங்கம் முன்வருவதன் மூலம், குருநாகலை, பொல் காவலை, புத்தளம், சிலாபம் போன்ற இடங்களில் உள்ள தென்னைமரங்களைப் போல வடபகுதியிலும் உற்பத்தி செய்ய முடியும்' என்று அந்த மகஜரில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (குவிம)

## இந்து இளைஞர் சங்க தீர்மானம்

சங்கானை, வெள்ளி

இந்தியாவிலிருந்து இறக்கு மதி செய்யப்படும் தமிழ் சஞ்சிகைகள் சம்பந்தமாக அரசாங்கம் திடீர்முடிவிற்கு வராமல், மேலும் தமிழ் பாண்டித்தியம் பெற்ற அறி ஞர்களுடன் கலந்து ஆலோ சித்தபின் செயலில் ஈடுபட வேண்டுமென்ற தீர்மானம் சங்கானை இந்து இளைஞர் சங்க மாதாந்தக் கூட்டத் தில் நிறைவேற்றப்பட்டது

கொழும்புப் பகுதிகளில் இயங்கிவரும் நடமாடும் மரக்கறி விற்பனை நிலையம் மாகாணங்களுக்கும் விஸ்த ரிக்கப்படல் வேண்டும் என் றும் கூட்டுறவுச் சங்கங்க ளும் சமாசங்களும்திறம்பட செயற்படுவதற்காக ஓர் ஆண்டிற்குமேல் ஓர்நிர்வாக சபை அங்கத்தவரை தெரிவு செய்யக் கூடாது என்றும் அரசாங்கத்தைக் கோரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

யாக இருந்து, சிறிது தியா னம் செய்தால், சுவாமி களின் அருளால் மனம் தூய் மையாகி, பொதுமக்களின் விமோசனத்துக்கு என்ன செய்யவேண்டுமென்ற எண் ணங்கள் நிச்சயம் உதிக்கும்.

இன்று எல்லாக்காரியங்க ளும் பண லாபத்தையே அடிப்படை நோக்கமாகக் கொண்டிருக்கின்றன. முன் காலத்திலே மக்களின் பசிப் பிணியைப் போக்குவதற்கா கவே விவசாயம் செய்து வந் தவர்களுக்கெல்லாம் பசி யாத அன்னம் வழங்குவர். ஆனால் இப்போது அந்த நோக்கம் பெரிதும் மறந்து. பணலாபம் அதிகம் பெறு வதே விவசாயத்தின் நோக்க மாகியுள்ளது. இதனால் பசி பட்டினிகள் அதிகமாகி, மக் கள் மனம் பலாத்கார புரட் சிகளில் திரும்பியுள்ளதில் வியப்பில்லை. வயிறுகாய்கை யில், சமய போதனை செய் யாதே என்று சுவாமி விவே கானந்தர் கூறினார். மக்கள் உள்ளத்தில் கோயில் கொண்டுள்ள தெய்வத்தை அவர் உணர்ந்து, "மக்கள் சேவையே மகேசன்சேவை" என்று முழங்கினார்

மனித அன்பை மீண்டும் வளர்த்துப் பசிப்பிணி நீக் கும் அந்தப்பெரும் பணியை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தெற்கே கதிர்காமத்தில் அமோகமாக நடத்திவரு வதைப்பார்க்கிறோம் ஆனால் சுவாமி விவேகானந்தர் அவ தரித்த வங்காளத்தில் இன்று நிலைமை என்ன? அங்கு அன்னதானம் செய் யப்படாதென்று அரசாங் கத்தடையே இருப்பதாக அங்கிருந்து வந்த ஓர் அன் பர் கூறினார் உண்மைதானா? சுவாமி விவேகானந்தரின் இப்புதிய கோயிலுக்குவரும் இந்தியப் பிரதமர் முதலிய வர்கள் அங்கு சிறிது நேர மாவது இருந்து தியானம் செய்தால், மக்களின் பசிப் பிணியைத் தீர்ப்பதை முதல் வேலையாகக் கொள்ளவேண் டிய அவசியத்தை உணரக் கூடும் பசிவந்திட, மானம், குலம், கல்வி, வண்மை, அறி வுடைமை, தானம், தவம், உயர்ச்சி தாளாண்மை தேனின் கசிவந்த சொல்லி லியர்மேல் காமுறுதல் முத லியபத்தும் பறந்துவிடு மென்பது முதுமொழி உண வுப் பஞ்சகாலத்தில் அன்ன தானங்கள் முடியுமா? என்று கேள்வி எழலாம். மனமுண் டானால் நிச்சயம்வழியுண்டு.

0 0 0

சுவாமி விவேகானந்தர் "என் பிரசார இயக்கத்திட் டம்" என்ற தலைப்பில் கூறி யிருப்பதாவது.

வைத்தாராம். உங்கள் பெற் றோர்கள் பணம் வாங்கும் போது இதை உணர்ந்திருக்க வேண்டும்" என்று பதில ளிப்பர்.

# ஐயாறன் எழுதுவது

சில பெண்கள் விபசாரிக ளாக மாறிவிட்டார்களா? என்று கேட்டதற்கு, இந் தியா திரும்பிய இருபெண் கள் சற்றே தயங்கி, "சில பெண்கள் கஷ்டம் தாங்கா மல் ஜெர்மனியிலுள்ள கன்னி மடங்களிலிருந்து தப்பி வெளியேறி வீட்டு வேலைக்காரர்களாகவும் விப சாரிகளாகவும்' மாறிவிட்ட தாகக் கேள்விப்பட்டதாகத் தெரிவித்தனர்

1963-ம் வருடம் முதல் 444 இளம் கேரளப் பெண் களை வண. பிதா ஸிரியாக் புத்தன்புரா இத்தாலி, பிரா ன்ஸ், பிரிட்டன் இந்நாடுக ளுக்கு "வெளிநாட்டு மிஷன் சேவை"க்காக அனுப்பியுள் ளாராம் கோட்டயத்துக்குப் பக்கத்திலுள்ள "நிர்மல பவன் செக்யூலர் (மதச் சார்பற்ற) ஸ்தாப னத்"தின் இயக்குனர் என்ற முறையில் அப்பெண்களை அனுப்பிவைத்ததாக அவர் ஓர் அறிக்கையில் தெரிவித் துள்ளார், அந்த கத்தோ லிக்க குருவுக்கு வயது 48. அப்பெண்கள் தாங்களே இஷ்டப்பட்டு சென்றார்கள் என்கிறார் அவர். சுமார் பத்து லட்சம் ரூபாய் மதிப் புள்ள கட்டிடங்கள் இது வரை கட்டப்பட்டுள்ளன. இன்னும் நவீன கட்டிடங் கள் கட்டப்படுகின்றன வாம்.

காலை முதல் மாலைவரை பெண்கள் வேலைவாங்கப் படுவதாகக் கூறுவது தவறு என்றும், முப்பது பெண்க ளில் நால்வரே திரும்பியுள் ளதாகவும் மற்றவர்கள் "இளவரசிகள்போல் இருப் பதாகவும்" வண பிதா புத்தன்புரா கூறுகிறார்.

இதைப்பற்றி இந்திய அர சாங்கம் நன்கு விசாரணை நடத்தி, உண்மையை அறி யும் வரை புதிதாக இந்தி யப் பெண்கள் அங்குசெல்ல அனுமதிக்கப்பட மாட் டார்களென்றும், ஏற்கெ னவே அங்கு சென்றுள்ள பெண்களைப்பற்றி நேரில் அறிந்து அவசியமானால் அவர்களை இந்தியாவுக்குத் திருப்பிக்கொண்டு சேர்க்க

தால் அவ்விதம் ... எழுதமாட்டார்களல்லவா?

0 0 0

இலங்கையில் பிரஜைக ளானவர்கள் மீண்டும் இந் தியாவில் குடியேறி இந்தி யப் பிரஜைகளாக முடி யுமா? இந்தியாவிலுள்ளவர் டப்படி, இந்தியாவில் தொடர்ந்து இரண்டுவரு

0 0 0

நன்றுடையானைத் தீயதி லானை நரைவெள் ளேறு ஒன்றுடையானை உமை யொரு பாகமுடையானைச் சென்றடையாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக் குன்றுடையானைக் கூற வென்னுள்ளங் குளிருமே.

—சம்பந்தர்.

...தாபனத்தலைவர் திரு சாள்ஸ் அபயசேகராவோ

சங்கானை, வெள்ளி

நாட்டைக் காக்கும் நிதி க்கு சங்கானை அரசினர் ஆஸ்பத்திரி ஊழியர்கள் பணம் சேர்த்து அனுப்பியு ள்ளனர்

'உள்ளூராட்சி அதிகாரசபைக்குத் தமிழர் நியமனம்

# திருத்தமோ எதிர்ப்போ இன்றி தீர்மானம் நிறைவேறியது'

## திரு. ஜெயபாலசிங்கம் விளக்கம்

"உள்ளூராட்சி அதிகார சபைக்கு தமிழர் தீர்மானம் நிறைவேறவில்லையாம்" என்ற தலைப்பில் நேற்று முன்தினம் ஈழநாடு இதழில் வெளியான செய்தி திகைப் பூட்டுவதுடன் இலங்கை வாழ் மக்கள் மனதில் ஓர் தப்பான அபிப்பிராயத்தை யும் ஏற்படுத்தியுள்ளது. அகிலஇலங்கைபட்டினசபை கள்சமாஜத்தின் ஐந்தாவது ஆண்டு மகாநாட்டில் திரு ஆசீர்வாதம் ஹென்றிகலந்து கொண்ட போதிலும் அவர் நிகழ்ச்சி நிரலையும் அங்கு தீர்மானிக்கப்பட்ட தீர்மா னங்களையும் சரியான முறை யில் கவனிக்கவில்லை என்பது அவர் அறிக்கைமூலம் புலனா கின்றது.

அகில இலங்கை பட்டின சபைகளின் சமாஜ ஐந்தா வது ஆண்டு மகாநாட்டில் முதலாம் நாள் நிகழ்ச்சி நிரலில்எனது தீர்மானம் எடுக்கப்பட்ட போது நான் பிரேரணையை தமிழ்மொழி யில் பிரேரித்து என்ன காரணங்களுக்காக உள்ளூ ராட்சி அதிகாரசபையில் ஒரு தமிழர் நியமிக்கப்பட வேண்டும் என்ற காரணங் களையும் தமிழில் விளக்கி னேன். எனதுபேச்சு சிங்கள மொழியில் சொல்லுக்கு சொல்லாக மொழிபெயர்க் கப்பட்டது எனது பிரேர ணையை ஒரு சிங்களப்பிர முகர் சிங்கள மொழியில் அனுவதித்தார். இதுவும் தமிழ் மொழியில் மொழிபெ யர்க்கப்பட்டது திரு. ஆசீர்வாதம் ஹென்றி எனது பிரேரணையை அனு வதித்தார் எனக் கூறுவது தவறானதாகும். ஆனால் அவர் எனது பிரேரணையை ஆத ரித்துப் பேசியது உண்மை.

ருகம பட்டினசபையின் பிரதிநிதி திரு. றுபேர்ட் அன்ரன் இப் பிரேரணைமீது பேசுகையில் கிராமசபை, பட்டினசபை, நகரசபை, மாநகரசபை ஆகியவைசார் பிலும் பல அங்கத்தவரை நியமிக்க வேண்டுமென்று அமைச்சரைக்கோரவேண்டு மென்றும் அப்படி நியம னம் நடைபெறும் போது தமிழ்ப் பிரதிநிதியும் இடம் பெறுவார்என்றும் கூறினார்

ருகம பட்டினசபைப்பிரதி நிதி திரு. றுபேர்ட் அன்ர னின் கருத்து எனது பிரேர ணைக்கு முரணாக அமைந்துள் ளது எனக்கூறி மேலும் பல கருத்துக்களை திரு. ஆசீர்வா தம் ஹென்றி வெளியிட் டார். திரு' றுபேர்ட் அன் ரனும் திரு. ஆசீர்வாதம் ஹென்றியும் ஒருவருக் கொருவர் முரன்பாடான கருத்துக்களை வெளியிட்ட மையால் எனது பிரேரணை யின் சரியான கருத்தை நான் மீண்டும் சபைக்கு விளக்கவேண்டிய சந்தர்ப் பம் ஏற்பட்டது. அப் பொழுது உள்ளூராட்சி அதிகாரசபை ஸ்தாபிக்கப் பட்ட காலத்திலிருந்து இவ் வருட முற்பகுதிவரை ஒரு தமிழ்ப்பிரதிநிதி இச்சபை யில் எப்பொழுதும் பிரதி நிதித்துவம் பெற்றுவந்துள் ளார். ஆனால் இவ்வருடம் நியமனம் நடைபெற்ற போது தமிழர் ஒருவருக்கும் பிரதிநிதித்துவம் கொடுக்கப் படவில்லை. சிங்களப்பகுதியி லுள்ள உள்ளூராட்சிமன்றங் கள் எவ்வாறு சிங்களப்பிரதி நிதிகளின் உதவியுடன் திற மையாகச் செயலாற்ற முடி யுமோ அதேபோல் உள்ளூ ராட்சி அதிகாரசபையில்ஒரு தமிழ்ப் பிரதிநிதிஇருந்தால் தமிழ்ப் பகுதியிலுள்ள உள் ளூராட்சி மன்றங்களும் திற மையாகச் செயலாற்றமுடி யும். ஆகையால் தமிழர்ஒரு வர் நியமனம் செய்யப்பட வேண்டும். மேலும் உள்ளூ ராட்சி அதிகாரசபையில் ஐந்து அங்கத்தவர்கள் இரு ந்து ஒரு சிங்களப் பிரமுகர் ராஜினாமாச்செய்தபோது கௌரவ அமைச்சர் அவ் வேளையிலாவது அக் காலி யான இடத்திற்கு ஒரு தமி ழ்ப் பிரதிநிதியை நியமிக் காது மீண்டும்ஒரு சிங்களப் பிரதிநிதியை நியமித்தமை மன வருத்தத்திற்குரியவிடய மாகும். தற்போது இருக்கும்

ஐந்து அங்கத்தினருள் உண் மையில் தயாளகுணமுடை யவரும், தமிழ்ச் சகோதரர் களின் நன்மையில் அக்கறை கொண்டு இந்நாட்டில் முன் னேற்றத்துக்குப், பாடுபடும் இச்சபையிலுள்ள ஓர் அங்கத் தவரைவாபஸ்பெறச்செய்து அவரின் இடத்திற்கு ஒரு தமிழ்ப் பிரதிநிதியை நிய மித்தால் அது எமக்குப் பெரும்பாக்கியமாக இருக் கும். இப்படி ஓர் சூழ்நிலை ஏற்பட்டால் எமது நாட்டில் துவேஷ மனப்பான்மை நீங்கி சகோதர ஒற்றுமை நிலைநாட்டப்பட்டு நாடு சுபி ட்சமடையுமென்பதை கருத்திற்கொண்டு ஒருதமிழ் பிரதிநிதியை நியமிக்கும் படி இச்சமாசம்வேண்டுகின் றது" என நான் விளக்கிப் பேசினேன்.

இதன் பின் மகாநாட்டி ற்குத் தலைமைவகித்த அ.இ. ப. ச. சமாசத் தலைவரும்மத் துகம ஆட்சிமன்ற உறுப்பி னருமான திரு. டி. பஸ் குவல் எனது பிரேரணைக்கு திருத்தம் அல்லது எதிர்ப்பு இருக்கின்றதா எனச்சபை யைக் கேட்டபோது, எந்த விதமான திருத்தமோ எதிர் ப்போ இருக்கவில்லை. இதைத் தொடர்ந்து எனது பிரேரணை ஏகமனதாக நிறைவேறியதாக தலைவர் திருபஸ்குவால்தெரிவித்தார் எனது தீர்மானம் ஏகமன தாக நிறைவேற்றப்பட்டது பற்றி தமிழிலும் சிங்களத் திலும் சபைக்குத் தெரிவிக் கப்பட்டது.

ஒரு பிரேரணை தோல்விய டைவதாயிருந்தால் வாக்கெ டுப்பின் பின்னரே தோல்வி அடையவேண்டும் எனது பிரேரணைக்கு எதிர்ப்பு இரு ந்திருந்தால் நிச்சயமாக நாங்கள் வாக்கெடுப்புக் கோரியிருப்போம். ஆனால் சிங்களதமிழர் ஒற்றுமை யின் அவசியத்தை உணர் ந்த சிங்களப்பிரதிநிதிகள் இத்தீர்மானத்தை ஏகமன தாக நிறைவேற்றினார்கள் என்பதை மிக்க மகிழ்சி யுடன் தெரிவிக்க விரும்பு கிறேன்.

## ஆலயப்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துச் செய்ய உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நட வடிக்கை எடுப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சர் முன்வந்திருப்பதாகவும் அறியப்படுகிறது.

சமூக ஏற்றத்தாழ்வுகள் ஒழிப்பு சம்பந்தமாக கைத் தொழில் விஞ்ஞான அமைச் சர் திரு ரி. பி. சுபசிங்கா தலைமையில் நியமிக்கப்பட்ட மந்திரிசபை உபகுழுவினர் நேற்றுக்கூடி வடமாகாணப் பொலிஸ் அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் அர சாங்க அதிபர் திரு வேர் ணன் அபயசேகரா ஆகி யோரை அழைத்து யாழ்ப் பாணப் பகுதியில் நிலவும் தீண்டாமைபற்றி விவாதித் தனர்.

அகில இலங்கைச் சிறு பான்மைத் தமிழர்மகாசபை யின் தூதுக்குழுவொன்று அதன் தலைவரும் நியமனப் பிரதிநிதியுமான திரு எம். ஸி. சுப்பிரமணியம்தலைமை யில் மந்திரிசபை உபகுழு வைச் சந்தித்து தீண்டா மைப் பிரச்னை பற்றியும் சமூகக் குறைபாடுகள் ஒழிப் புச் சட்டம் பற்றியும் தங் கள் கருத்தை எடுத்துக் கூறியதாகவும் வடபகுதி யில் அரசாங்க சேவை நிர் வாக அதிகாரிகள் பொறுப் புக்குச் சிங்கள மக்களையே அனுப்ப வேண்டுமென்றும் அப்போதுதான் தீண்டாமை ஒழிப்புச் சாத்தியமாகுமென் றும் தூதுக்குழு தெரிவித்த தாக அறியப்படுகிறது.

வடபகுதியில் 157 சைவாலயங்களிருப்பதாக வும் இவற்றில் 27 ஆலயங் கள்தான் இதுவரை பாகு பாடின்றி எவரும் சென்று வணங்கக்கூடியதாகத் திற ந்து விடப்பட்டிருப்பதாக வும் தெரிவிக்கப்பட்டது.

## பிரதமர் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் குழுமியிருந்தனர். பிரதமர் பதவியை ஏற்ற பின்னர் முதன் முதலாக வெளிநாடு செல்லும் திருமதி பண்டாரநாயக் காவை அமைதியாகவும் மகிழ்ச்சியோடும் வழியனுப் பிவைத்தனர். பிரதமர் முன்பு தெரிவித்திருந்தபடி உத்தியோகபூர்வமான வழி யனுப்புவைபவங்கள்எதுவும் நடைபெறவில்லை பிரதமர் உட்பட தூதுகோஷ்டியில் உள்ளசகலரும்சிக்கன வகுப் பிலேயே பயணமாயினர்.

செப்டம்பர் 8-ம் திகதி தொடக்கம் 10-ம் திகதி வரைநடைபெறும் நடுநிலை மை நாடுகள் உச்சி மகா நாட்டில் கலந்து கொண்ட பின்னர் பிரதமர் பிரான் சுக்குத் தனது உத்தியோக பூர்வமான விஜயத்தை மேற்கொள்ளுவார்.

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன் லேனில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org